egistered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ தை 9 ஆம் நாள ஷஃபான் 15 (22-1-62) திங்கட்கிழமை இதழ் 293

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# மரண தண்டனை திருத்த மசோதா – இஷ்டம் போல்

## வாக்களிக்கும் உரிமை

### அரசாங்க எம். பி. க்கள் சிலர் கோரிக்கை

### பூரண விவாதத்துக்கு எதிர்க்கட்சிகள் கோரும்

கொழும்பு, ஞாயிறு

இம்மாதம் 25ந் திகதி வியாழக்கிழமை ஜனப் பிரதிநிதிகள் சபை மீண்டும் கூடும்பொழுது மரணதண்டனைத் திருத்த மசோதா விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத் தெரிகிறது.

மரண தண்டனைத் திருத்த மசோதாமீது பூரண விவாதம் நடத்த எதிர்க்கட்சியினருக்குச் சந்தர்ப்பமளிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரவிருக்கின்றனர்.

யு. என். பி., சமசமாஜக்கட்சி, தமிழரசுக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவைகள் இத்திருத்த மசோதாவைக் கடுமையாக எதிர்க்க முடிவுசெய்துள்ளன.

இத்திருத்த மசோதா சம்பந்தமாக அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் தங்கள் இஷ்டம்போல் வாக்களிக்க அனுமதியளிக்கவேண்டுமென்று சில அங்கத்தவர்கள் யோசனை கூறியிருப்பதாகவும் இதுபற்றி அரசாங்க வட்டாரங்கள் பரிசீலனை செய்துவருவதாகவும் தெரிகிறது. வியாழக்கிழமை காலையில் நடைபெறவிருக்கும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படுமெனத் தெரிகிறது.

இதே சமயம் வேறுபல நகரங்களிலிருந்தும் இத்திருத்த மசோதாவுக்குக் கண்டனம் தெரிவித்து வழக்கறிஞர்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளனர்.

## தெஹ்ரானில் மாணவர் ஆர்ப்பாட்டம்

### தடியடிப் பிரயோகத்தில் பலர் காயம்; மற்றும் பலர் கைது

தெஹ்ரான், ஜன. 21

பாரசீகத்தின் முன்னாள் பிரதமரான முகம்மது மொஸாதிக்கை ஆதரித்து இன்றுமாணவர்கள் தலைநகரான தெஹ்ரானில் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்தனர்.

பிரதமர் அமிர்அலியின் அரசாங்கம் ராஜினமாச் செய்ய வேண்டுமென்றும் விரைவில் பொதுத்தேர்தல் நடைபெற வேண்டுமென்றும்கோரி ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்களைக் கலைக்கமுயன்ற பாதுகாப்புப் படையினர்மீது மாணவர்கள் கற்களையும், செங்கட்டிகளையும் வீசியதாகவும் இதன்பின் ஆர்ப்பாட்டக்காரரைக் கலைக்க தடியடிப்பிரயோகமும் கண்ணீர்ப்புகை பிரயோகமும் செய்யப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

தடிகள் தாங்கியவண்ணம் ஊர்வலமாகச்செல்ல முயன்ற மாணவர் கோஷ்டியொன்றும் கலைக்கப்பட்டது.

தடியடிப் பிரயோகத்தினல் பலர் காயமடைந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் சம்பந்தமாகப் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் குழந்தைகள் கல்விக் கழகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

"கல்வித் துறையில் பல மாற்றங்களும் திருத்தங்களும் ஏற்பட்டுவருகின்றன. யாழ்ப்பாணத்தில் இம்மாறுதல்கள் பெருமளவில் ஏற்படவில்லை. மனித வாழ்வில் குழந்தைகளின் ஆரம்ப வளர்ச்சி மிகவும் முக்கியமானது. இன்றைய நிலையில் கணவனும், மனைவியும் சேர்ந்து தொழிலில் ஈடுபடவேண்டியுள்ளது. இந்நிலையில் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க உதவும் நிலையங்கள் அவசியமாகும். கல்வி சமூக மாற்றங்களுக்கு அத்தியாவசியமான குழந்தைகள் கல்விக் கழகம் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருப்பது வரவேற்கவேண்டிய நல்ல முயற்சியாகும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் கடந்த சனிக்கிழமை குழந்தைகள் கல்விக் கழகத்தின் திறப்பு விழாவில் பேசிய வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் நிறுவப்பட்டிருக்கும் இக்கழகத்தை வண. பிதா. டாக்டர் ஜே. எமிலியானுப்பிள்ளை திறந்து வைத்தார். இக்கழகம் செல்வி எல். துரையப்பாவினல் நிறுவப்பட்டுள்ளது. இத்திறப்பு விழா வைபவத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா, மாநகர சபை கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்கா, மற்றும் மாநகர சபை அங்கத்தவர்கள், வழக்கறிர்கள், பொது மக்கள், டாக்டர்கள் ஆகியோர் வந்து கலந்து கொண்டனர். பெருந்தொகையான பெண்களும் வந்திருந்தனர்.

இது சம்பந்தமாக நடைபெறற கூட்டத்திற்கு வண. பிதா. டாக்டர் எமிலியானுப்பிள்ளை தலைமை வகித்தார். இப்படியான கழகங்கள் யாழ்ப்பாணத்தில் இதுவரையிலும் இல்லாத குறை இப்பொழுது பூர்த்தியாகியிருப்பதாகவும் இக்கழகம் பூரண வெற்றியை ஈட்ட பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். திரு. சோமசேகரம் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக்கழகம் நல்ல ஆசிரியரைக் கொண்டு ஆரம்பிக்கப்படுவது வரவேற்கவேண்டியதொன்றுகுமென்றும், தாயுள்ளத்துடன் பிள்ளைகளின் வளர்ச்சியில் இக்கழகம் பணிபுரியவேண்டும். தமிழ்ப் பண்பாடும் செழிக்க வழியமைக்க வேண்டுமென்றும் மேல் நாட்டு முறைகளையும் ஏற்றவகையில் பின்பற்றவேண்டுமென்றும் கூறினர்.

செல்வி இன்பம் துரையப்பா பேசுகையில் இந்தக் குழந்தைகள் கல்விப் கழகம் எதிர்காலத்தில் எல்லா வசதிகளையும் கொண்ட பெரிய கழகமாக அமைவதற்கான வழிவகைகள் செய்யப்படவிருப்பதாகவும் இதற்குப் பலரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

செல்வி எல். துரையப்பா நன்றி கூறினர்.

—

### இலவச படக்காட்சி

நீர்வேலி, ஞாயிறு

சிறுப்பிட்டி பூமகள்சனசமூக நிலையத்தில் பெர்லின் பிரச்னை, கமச்செய்கை, விளையாட்டுகள் அடங்கிய இலவச படக்காட்சியொன்று காண்பிக்கப்பட்டது. பலர் பார்த்துச் சென்றனர்.

ஹாக்கிப் போட்டி

### இந்தியாவுக்கு முதலிடம்

புதுடில்லி, ஜன. 21

ஆமதாபாத்தில் நடந்த சர்வதேசஹாக்கி விளையாட்டுப் போட்டியில் இந்தியாஎல்லாப் போட்டிகளிலும்வெற்றிபெற்று முதலிடத்தைப்பெற்றது. ஜெர்மனி இரண்டாவது இடத்தையும், ஆஸ்திரேலியா மூன்ருவது இடத்தையும் பெற்றன.

—

கிரிக்கெட்

### இங்கிலாந்து முன்னேறுகிறது

டாக்கா, ஜன. 21

இங்கிலாந்து கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்கும் இங்கு நடைபெற்றுவரும் கிரிக்கட் "டெஸ்ட்" போட்டியில் இங்கிலாந்து கோஷ்டி இதுவரை 1விக்கட் நஷ்டத்துக்கு 333ரன்கள் எடுத்துள்ளது. பாகிஸ்தான் தனது முதலாவது இன்னிங்ஸில் ஏழு விககட்டுகளை இழந்து 393 ரன்கள் எடுத்ததும் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

—

### "பேச்சுவார்த்தை நடத்த தயார் ஆனல் டச்சுடனல்ல"

நியுயோர்க். ஜன. 21

மேற்கு இரியான் விவகாரம் சமபந்தமாக ஐ. நா. பதில்தலைமைக்காரியதரிசி யுதாண்ட் எடுக்கும் சமரசப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு இந்தோனேஷியா தயாராக இருப்பதாக தலைமைக் காரியதரிசிக்கு இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

ஆனல் டச்சு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவோ, பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளவோ தயாராக இல்லையென்று இந்தோனேஷியா அறிவித்துள்ளது.

—

### ராபர்ட் கென்னடிக்கு ரஷ்யா அழைப்பு

வாஷிங்டன், ஜன. 21

பெப்ரவரிமாதம் இரண்டாந் திகதி அமெரிக்க ஜனதிபதியின் சகோதரரும் அமெரிக்க அட்டர்ணி ஜெனரலுமான திரு. ரொபர்ட் கென்னடி உலக சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறர். இச் சுற்றுப் பிரயாணத்தின்போது மாஸ்கோவுக்கு விஜயம்செய்யுமாறு சோவியத் யூனியன் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை அமெரிக்க ராஜாங்க இலாகா பரிசீலனை செய்துவருகிறது.

## தமிழ்நாடு தேர்தல் – 1394 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர்

சென்னை, ஜன. 21

தமிழ்நாட்டில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் 206 சட்டசபை ஸ்தானங்களுக்கும் 41 லோகசபை ஸ்தானங்களுக்கும் 12 அரசியல்கட்சிகளைச் சேர்ந்த 1394 பேர் போட்டியிடுவதற்காக தங்கள் அபேட்சாபத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

லோகசபைஸ்தானங்களுக்கு காங்கிரஸின் சார்பில் 56 பேர்களும் தி. மு. கழகத்திலிருந்து 23 பேர்களும் சுதந்திராக்கட்சியிலிருந்து 20 பேர்களும் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து 14பேர்களும் பிரஜாசோஷலிஸ்ட்கட்சியிலிருந்து 5 பேரும் சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து 5 பேரும் ஜனசங்கக் கட்சியிலிருந்து இருவரும் குடியரசுக் கட்சியிலிருந்து இருவரும் போர்வார்ட்பிளாக் கட்சியிலிருந்து ஒருவரும் சுயேச்சை அபேட்சகர்கள் 80 பேரும் அபேட்சாபத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர்.

தமிழ்நாடு சட்டசபை ஸ்தானங்களுக்குப் போட்டியிடும் அபேட்சகர் தொகை விபரம்:- காங்கிரஸ்- 279, தி. மு. க. 173, சுதந்திரா - 102, கம்யூனிஸ்ட்- 76, பிரஜாசோஷலிஸ்ட்- 28, சோஷலிஸ்ட்- 08, போர்வார்ட்பிளாக்- 07, ஜனசங்- 04, குடியரசுக்கட்சி- 04.

—

### குடியரசு தின கொண்டாட்டம்

புதுடில்லி, ஜன. 21

இம்மாதம் 26-ந் திகதி நடைபெறவிருக்கும் இந்திய குடியரசுதினக் கொண்டாட்டத்தில் இந்தியாவில் முதல் முதலாகச் செய்யப்பட்ட ஒலியைவிட வேகமாகச் செல்லும் போர்விமானங்களும் கலந்துகொள்ளவிருக்கின்றன.

—

### ஹமர்ஷீல்ட் நினைவு முத்திரை

லியப்போல்ட்வில்லி, ஜன. 21

காங்கோ விவகாரம் காரணமாக விமான விபத்தில் அகால மரணமடைந்த ஐ நா. தலைமைக்காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டின் ஞாபகார்த்தமாக காங்கோ அரசாங்கம் புதிய தபால் முத்திரையொன்றை வெளியிட்டது.

# "தீண்டாமையை அகற்ற பாடுபடவேண்டும்"

## சமூக முன்னேற்றச்சங்க ஆண்டுவிழாவில் பேச்சு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்குக் கல்வியறிவு, பொருளாதாரம் ஆகியன முக்கியமாகும். இவைகளைவிட மிக முக்கியமானது ஒற்றுமை. ஒற்றுமையுடன் வாழ்ந்த எந்தச் சமூகமும் தாழ்ந்தது கிடையாது. எனவே தாழ்த்தப்பட்ட மக்கள் எனக் கூறப்படும் நாம் நமது விடுதலைக்கு ஒன்றுபட்டுப் போராடவேண்டும். அதே நேரத்தில் தமிழ்த்தாய் வாழத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து 'தீண்டாமை' ஒழியவேண்டும்."

இவ்வாறு சென்ற திங்கட்கிழமை அல்லைப்பிட்டியில் நடைபெற்ற அர்ச். பிலிப்பு நேரியார் கோவிலுக்குச் சேர்ந்த கிறிஸ்தவர்களின் சமூக முன்னேற்றச்சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய சமாதான நீதவானும், வேலணைத் தீவு 'சிறுபான்மைத் தமிழர்' தலைவருமான திரு. மு. ஆறுமுகம் குறிப்பிட்டார்.

அடுத்து சங்கக் காரியதரிசி திரு. கந்தசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்று எங்கு பார்த்தாலும் உயர்வு தாழ்வு மனப்பான்மையே நிலவுகின்றது. மனிதனின் நிறத்தின் தன்மையிலே உயர்வு தாழ்வு, மொழியின் அடிப்படையிலே உயர்வு தாழ்வு, தொழிலின் வேறுபாடுகளிலே உயர்வு தாழ்வு, கல்வியறிவிலே உயர்வு தாழ்வு காணப்படுகிறது. தமிழர்கள் மத்தியிலே கொடுமையானது தொழிலின் வேறுபாடுகளில் உண்டான தீண்டாமையாகும். இது கறைபிடித்த சாபக்கேடான நோயாகும். இந்தக் கொடிய நோயைத் தமிழர்கள் அகற்ற முன்வரவேண்டும். அதற்காக அயராது உழைக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்ச் சமூகத்திற்கு விடுதலை கிடைக்கும்."

வவனியா மாவட்டச் சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு.யோ. டோமினிக், திரு. க. திரவியம், ஆகியோரும் பேசினர்.

விழாவின் இறுதியில் விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு விழாத் தலைவர் திரு. மு. ஆறுமுகம் பரிசில்களை வழங்கினர்.

பின்வருபவர்கள் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர் திரு. தே. செபஸ்தியாம்பிள்ளை, உபதலைவர் திரு. ச. சந்தியா, காரியதரிசி திரு. க. திரவியம், உபகாரியதரிசி, திரு. சு. கீதபொங்கலன், தனதிகாரி திரு. அ. மனுவல்.

காரியதரிசி நன்றிகூற விழா நிறைவேறியது.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்



### அறிவித்தல்

காடு வெட்டி எரித்தல், கட்டை பிடுங்குதல், சாறுதல், வரம்பு போடுதல் இன்னும் வயல் வேலைகள் திருப்திகரமான முறையில் செய்து கொடுப்போம். விபரங்கட்கு: எம்.செங்கோல், c/o "வஸந்தாஸ்", கரடிப்போக்கு, கிளிநொச்சி.



10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினிய இன்டஸ்ட்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்

J. D


## 18வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சலுகை

கொழும்பு, ஞாயிறு

எச். எஸ். ஸி. வகுப்புகளில்லாத பாடசாலைகளில் பயிலும் 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் தொடர்ந்து கல்விபெற விரும்பினல், அவர்கள் வேறு அரசாங்க பாடசாலைகளிலோ வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் பாடசாலைகளிலோ சேர்ந்து படிக்க அனுமதியளிப்பது சம்பந்தமாக கல்வி இலாகா ஆலோசனை செய்து வருகிறது.

இத் திட்டத்தின்படி எச். எஸ். ஸி. வகுப்பு இல்லாத பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள எச். எஸ். ஸி. வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகளில் பயில அனுமதிக்கப்படுவார்கள். எஸ். எஸ். ஸி. தராதரப் பத்திரத்துக்கு சமமான தராதரப் பத்திரத்துடன் எச். எஸ். ஸி. வகுப்பில் தொடர்ந்து படிப்பதற்கு தேவையான இரு பாடங்களில் விசேஷ சித்திபெற்றிருப்பவர்களே இவ்விதம் எச் எஸ். ஸி. வகுப்பில் தொடர்ந்து பயிலலாம்.

## ஜி. ஸி. ஈ.

கொழும்பு, ஞாயிறு

ஜி. ஸி. ஈ மாணவர்களுக்கு விண்ணப்பப் பரீட்சையையும், விண்ணப்பங்களைத் திருப்பிப் பெறும் பரீட்சை (வித்டிராவல் டெஸ்ட்)யையும் ஒழித்துவிட கல்வி இலாகா தீர்மானித்துள்ளது. முதல் வருடப் பாடத்திலேயே மாணவர்களை வைத்திருக்காமல் எல்லோரையும் ஜி. ஸி. ஈ. க்கு உயர்த்தும்படியான கல்வி இலாகாவின் உத்தரவு பாடசாலைகளுக்கு அனுப்பப்படும்.

## பாடசாலையிலிருந்து வெளியேறுபவர்களுக்கு பயிற்சி

கொழும்பு, ஞாயிறு

ஒரு வருடத்துக்கு முன்னர் பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்கும் இந்த வருடம் வெளியேறும் மாணவர்களுக்கும் விவசாயம், கல்வித்துறை, கைத்தொழில் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஒழுங்கு செய்வதற்காக விவசாயம், கல்வி, கைத்தொழில், காணி அபிவிருத்தி ஆகிய இலாகாக்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களைக்கொண்ட ஒரு கமிட்டியை அரசாங்கம் நியமித்துள்ளது.

## தேசிய சேவை பற்றி தலைமை ஆசிரியர் மகாநாடு

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் தேசீய சேவையை விரைவில் ஆரம்பிக்கு முகமாக வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளின் வித்தியாதரிசி திரு. எம். கேதுசிகாமணியால் தலைமை ஆசிரியர்களது மகாநாடொன்று கூட்டப்பட்டது.

தேசீய சேவையை பொதுவாக சகல பாடசாலைகளிலும் விரைவில் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டதுடன் இப்பகுதிப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியை 2ம் தவணைக் காலத்தில் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# "நாகமுத்து இறந்து கிடந்ததைக் கண்டேன்"

## உரும்பராய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

உரும்பராய் கொலை வழக்கு விசாரணை மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இவ் வழக்கில் பொன்னன் செல்லத்துரை, பொன்னன் நாகமுத்து, பொன்னன் சின்னத்துரை, பொன்னன் நடேசு ஆகிய நான்கு சகோதரர்கள் சின்னடியான் நாகமுத்து என்பவரை கடந்த செப்டெம்பர் 15-ம் திகதி கொலைசெய்ததாக சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. செபமாலை குற்றஞ்சாட்டியிருந்தார்.

எதிரிகளின் சார்பாக திரு. எஸ். நடராஜா ஆஜரானர்.

வேலன் பொன்னன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

மாலை சுமார் 7-30க்கு நாகமுத்துவின் கூக்குரலைக் கேட்டேன். அங்கு நான் சென்றபோது அவர் வீட்டுக்கு முன்னல் காயங்களுடன் விழுந்துகிடந்ததைக் கண்டேன். என்ன நடந்தது என அங்கிருந்த ஜனக்கூட்டத்தைக் கேட்டேன். ஒருவரும் என்ன நடந்ததென்பதைச் சொல்லவில்லை. கிராமாதிகாரியின் வீட்டுக்குச் சென்று தெரிவிக்குமாறு கூறினர்கள். கிராமாதிகாரியுடன் நான் திரும்பிவந்தபோது நாகமுத்து இறந்துகிடந்தார். காளிகோவில் வளவில் கிட்டினன் காயமடைந்த நிலையில் இருந்தார், கிராமாதிகாரி என்னிடம் ஒரு அறிக்கையைக் கொடுத்து சுன்னாகம் பொலிசில் கொடுக்குமாறு கூறினர். காலஞ்சென்றவரின் சகோதரியை எனது சகோதரர் விவாகம்செய்திருக்கிறர். காலஞ்சென்றவரின் மனைவியும் கூட எனக்கு உறவினராகும்.

உரும்பிராய் கிராமாதிகாரி, சப் இன்ஸ்பெக்டர் கலனசூரியா, காலஞ்சென்றவரின் மனைவி ஆகியோர் சாட்சியமளித்தபின் ஜனவரி 31-ந் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தாலியைத் திருடியதாக வழக்கு

பருத்தித்துறை ஞாயிறு

புலோலி மேற்கைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை வேலாயுதம் என்பவர்மீது அதே ஊரைச் சேர்ந்த இளையதம்பி இராசம்மா என்பவரது 600 ரூபா பெறுமதியான தாலிக் கொடியைத் திருடியதாக குற்றம்சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் எதிரியை குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை இம் மாதம் 22ம் திகதிக்கு தள்ளிவைத்தார்.

## சன சமூக நிலைய தெரிவு

வேலணை, ஞாயிறு

வேலணை மேற்கு காந்தீய சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சனசமூக நிலையங்களின் பணிபற்றி கூட்டத்தில் பலர் எடுத்துரைத்தனர். வேலணைக் கிராமசபை உபதலைவர் திரு. நா. வீரசிங்கம் பேசுகையில் நாட்டின் வருங்கால முன்னேற்றம் வாலிபர் கையில் தங்கியுள்ளதென்றும் இளமையில் இருந்தே அவர்கள் தங்களை சமூகப்பணிக்கு தயாராக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்னர் நடைபெற்ற தேர்வில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்: திரு. சு. நாகரத்தினம். தலைவர்: திரு. பொ. பரராசசிங்கம். உப தலைவர்: திரு. ந. கணேசபிள்ளை. இணைச் செயலாளர்கள்: திரு. வை. சிவநாதன், திரு. செ. பாலச்சந்திரன். பொருளாளர்: திரு. சி. யோகநாதன். உதவிப் பொருளாளர்: க. சண்முகநாதன்.

## பாகிஸ்தானுக்கு மேனன் எச்சரிக்கை

பம்பாய், ஜன 21

பாகிஸ்தான் காஷ்மீர் எல்லையை மீறினல் திருப்பியடிக்கப்படும் என திரு. கிருஷ்ண மேனன் இங்கு எச்சரிக்கை விடுத்தார்.

# தமிழகத் தேர்தலில் புதிய...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

### முத்துராமலிங்கத்தேவர்

அருப்புக்கோட்டை பார்லிமெண்ட் தொகுதிக்கு பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அபேட்சை மனுத்தாக்கல் செய்திருக்கிறர்.

### ஆதித்தனா

திருச்செந்தூர் தொகுதிக்கு 'நாம் தமிழர்' கட்சித்தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அபேட்சை மனுதாக்கல் செய்தார்.

### நடிகர் ராஜேந்திரனுடன் 35 கார்கள் பவனி

தேர்தலில் போட்டியிடும் நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், அபேட்சைமனு தாக்கல் செய்தார். மதுரை மாவட்டம் தேனி தொகுதியில் இருந்து, தமிழ்நாடு சட்டசபைக்கு நடிகர் ராஜேந்திரன் போட்டியிடுகிறர். 35 கார்கள் அணிவகுத்து செல்ல தேர்தல் மனு தாக்கல் செய்ய ராஜேந்திரன் சென்றர். அவருடன் நடிகர் டி. வி. நாராயணசாமி, மதுரை மாவட்ட தி. மு. கழக செயலாளர் எஸ். முத்து ஆகியோரும் சென்றனர்.

ராஜேந்திரனை எதிர்த்து காங்கிரஸ் கட்சி சார்பில் என். ஆர். தியாகராஜன் போட்டியிடுகிறர். இதற்கு முன் அவர் 25 கார்களில் சென்று அபேட்சை மனுதாக்கல் செய்தார்.

### சாத்தூரில் சுதந்திரா போட்டி

முதலமைச்சர் திரு. காமராஜரை எதிர்த்து சுதந்திராகட்சி அபேட்சகராக திரு. ராமமூர்த்திநாயுடு அபேட்சைமனு தாக்கல் செய்துள்ளார்.

### காஞ்சிபுரம் தொகுதி

தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாத்துரையை எதிர்த்து காங்கிரஸ் அபேட்சகராக திரு. எஸ். வி. நடேசமுதலியாரும், திரு. எம். கே. பரசுராம்நாயக்கரும் அபேட்சை மனு தாக்கல் செய்துள்ளர்.

# தமிழகத் தேர்தலில் புதிய திருப்பம்
# தென் சென்னையில் பலப்பரீட்சை

## பல மாறுதல்களை ஏற்படுத்தும் புதிய திருப்பம்

தமிழகப் பொதுத் தேர்தலில் அநேகமாக அபேட்சகர்கள் தங்கள் அபேட்சை மனுக்களைத் தாக்கல் செய்துகொண்டுள்ளனர். தமிழகத் தேர்தலில் சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில் புதிய திருப்பமொன்று ஏற்பட்டுள்ளது. இன்னும் சிலதினங்களில் வேறும் எதிர்பாராத மாறுதல்கள் ஏற்பட்டாலும் அது எதிர்பார்க்கக்கூடியதாகவே இருக்கும். இப்புதிய திருப்பத்துக்கு தென் சென்னைத் தொகுதியே நிலைக்களமாக இருக்கிறது. தி. மு. க. வின் கோட்டையான இத்தொகுதியில் பல கட்சிகளும் கண்ணோட்டம் செலுத்துவார்களென இப்பத்திகளில் முன்னர் நாம் எழுதியிருந்தது இப்பொழுது முற்றிலும் உண்மையாகிவிட்டது.

செல்வாக்குமிக்க தலைவர்கள் தென் சென்னைத் தொகுதிக்கு அபேட்சை மனுத் தாக்கல் செய்துள்ளனர். இங்கு நடக்கவிருப்பது ஒரு பலப்பரீட்சையாகவே அமையும். வாக்காளர்களின் கண்களும் இத்தொகுதியில் கண்ணோட்டம் செலுத்திக்கொண்டே இருக்கின்றன. தி. மு. க. அபேட்சகராக நாஞ்சில் திரு. கி. மனோகரனும், தமிழ்த் தேசியக் கட்சி அபேட்சகராக அதன் தலைவர் திரு. ஈ. வே. கி. சம்பத்தும் போட்டியிடுகிறார்கள் என்பது தெரிந்ததே. தி. மு. க. வின் கோட்டையைத் தகர்த்தெறிவதற்கு பல கட்சிகளும் கங்கணங்கட்டி பலம்வாய்ந்த தலைவர்களை நிறுத்தியிருக்கின்றன.. காங்கிரஸ் சார்பில் திரு டி. டி. கிருஷ்ண்மாச்சாரி தென்சென்னைத் தொகுதிக்கு அபேட்சை மனுத் தாக்கல் செய்திருப்பதும் எதிர்பார்த்த ஒன்றே. ஆனல், இன்று அது ஒரு புதிய திருப்பதிதை ஏற்படுத்தியுள்ளது. இத்தொகுதியில் சுயேச்சையாளராகப் போட்டியிடும் தலைசிறந்த எஞ்சினியரான திரு எம். கணபதிக்கு சுதந்திரா கட்சி ஆதரவளிக்க முடிவுசெய்துள்ளது.

காங்கிரஸைப்பற்றி இதுவரை விமர்சிக்காத தமிழ்த்தேசியக் கட்சி "தென் சென்னையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரி போட்டியிட்டால் அவரைத் தோற்கடிப்போம்" என்று கங்கணம் கட்ட ஆரம்பித்துவிட்டது. சிங்கத்தை அதன் குகையில் வைத்தே தாக்கவேண்டுமென்று தி. மு. க. நாஞ்சில் மனோகரனை எதிர்த்து திரு சம்பத் மனு தாக்கல் செய்தது தெரிந்ததே. ஆனல் தமிழ்த் தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர் கவிஞர் கண்ணதாசன் விடுத்திருக்கும் அறிக்கைப்படி இறுத் நேரத்தில் பல மாறுதல்கள் ஏற்படுமென்று நம்ப இடமிருக்கிறது. இத்தொகுதியில் ஏற்படும் மாறுதல்கள் தமிழ்நாடு முழுவதும் பரஸ் மற்றைய கட்சிகளுக்கிடையேயும் மாறுதல்களை ஏற்படுத்தலாம். அபேட்சை மனு வாபசாகும் இறுதித் தேதியையடுத்து ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்தே தமிழக அரசியல் பற்றிய ஆரம்ப முடிவை அறிந்துகொள்ளமுடியும்.

## கண்ணதாசன் அறிக்கை

"ஒரு வாரத்துக்குள் எல்லா எதிர்க்கட்சிகளும் ஒரே அணியில் நிற்கக்கூடும். அரசியல் வர்ணனை மாறும். அப்படிமாறினல்,' டி. டி. கே. யின் மந்திரிப்பதவிக் கனவு, பகல்கனவாக முடியும். சந்தர்ப்பவாதிகள்தான் தமிழ்த் தேசிய கட்சியின் முதல் எதிரிகள். சுவையான செய்திகளைப் பொதுமக்கள் இனித் தினந்தோறும் கேட்கலாம்" என்று கவிஞர் கண்ணதாசன் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

## பி. டி. ராஜன் கடைசி முயற்சியும் தோல்வி

தி. மு. க., சுதந்திரா, பி. சோ. கட்சிகளிடையே மோதலைத் தவிர்த்து உறவு உண்டாக்க ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் திரு பி. டி. ராஜன் எடுத்த கடைசி முயற்சியும் தோற்றுவிட்டது. சுதந்திரா—தி. மு. க. உறவு முறிந்த பிறகு இரு கட்சிகளிடையே மீண்டும் சமரசம் செய்துவைக்க திரு பி. டி. ராஜன், திரு வி. வி. ராமசாமி நாடார் ஆகியோர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, இரு தரப்புத் தலைவர்களையும் சந்தித்துப்பேசினர்கள்.

தி. மு. க.-சுதந்திரா உறவைப் புதுப்பிக்க பி. சோ. கட்சித் தலைவர் திரு பி. எஸ். சின்னத்துரையும் அக்கறை எடுத்து சென்னைக்கு வந்தார். சென்ற வாரம் காஸ்மாபாலிடன் கிளப்பில் தி. . மு. க., சுதந்திரா, பி. சோ. கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு திரு பி. டி. ராஜன் ஏற்பாடு செய்தார். திருவாளர்கள் நெடுஞ்செழியன், திரு அன்பழகன் (தி மு க), சின்னதுரை, திரு வி. ஆர். ராதாகிருஷ்ணன் (பி சோ) திரு எஸ. எஸ. மாரிசாமி(சுதந்திரா) ஆகியோர் அதில் கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

## அபேட்சகர்களுக்கான விளக்கப் புத்தகம்

முதல் இரண்டு பொதுத் தேர்தல்களின்போது அபேட்சகர்களுக்காக தேர்தல் கமிஷன் விளக்கப் புத்தகமொன்றை வெளியிட்டிருந்தது. அதற்குப் பிறகு தேர்தல்கள் சம்பந்தமான சட்டமும் நடைமுறைகளும் பல அம்சங்களில் மாறுதல் அடைந்துள்ளபடியால் வாக்குச் சீட்டுகளில் குறியிட்டு வாக்குப் பதிவுசெய்யும் முறையின்கீழ் மக்கள் சபைக்கும் ராஜ்ய சபைகளுக்குமான தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்களுக்காக முற்றிலும் திருத்தியமைக்கப்பட்ட விளக்கப் புத்தகமொன்றை தேர்தல் கமிஷன் இப்போது வெளியிட்டிருக்கிறது. சட்டம், விதிகள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளோடு கூட அபேட்சகருக்குத் தெரிந்திருக்கவேண்டிய எல்லா முக்கிய தகவல்களும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. வாக்குப் பதிவு ஏஜண்டுகளுக்கான குறிப்புகள் அடங்கிய 10 பக்க பிரசுரமொன்றையும் கமிஷன் வெளியிட்டிருக்கிறது.

## தேர்தல் முடிவுகள் அறிவிப்பு

வாக்குகள் எண்ணிக்கை பெப்ரவரி 25ஆம் தேதி தொடக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். மார்ச் மாதம் 2 அல்லது 3-ஆம் தேதிக்குள் எல்லா முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிடும்.

## புதுசட்டசபைகள் செயல்படும் தேதி

புது சட்டசபைகள் செயல்படத் தொடங்கும் தேதி மார்ச் 3-ஆம் தேதி என்று தேர்தல் ஆணையாளர் முடிவுசெய்திருக்கிறார்.

## காமராஜருக்கு தி. மு. க. பிரமுகரின் கார் அன்பளிப்பு

வேலூ (சேலம்) பிரபல தி. மு. க. பிரமுகரான ந. கணேசன் தி. மு. கழகத்திலிருந்து விலகியதுடன், முதல் மந்திரி திரு. காமராஜ் வருகிற பொதுத்தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்று தாம் விரும்புவதாகவும், அவருடைய வெற்றிக்காக தம்முடைய சொந்தமான 'பிளஷர் கார்' ஒன்றைக் கொடுத்துத் தேர்தலில் வேலைசெய்ய விரும்புவதாகவும் கடிதம் மூலம் திரு. காமராஜுக்கு தெரிவித்திருக்கிறார்.

திரு. காமராஜ் அவருடைய கடிதத்திற்கு மகிழ்ச்சிதெரிவித்து தேவையிருந்தால் விரும்பிப் பெற்றுக்கொள்வதாக பதில் தெரிவித்துள்ளார்.

## தேர்தலில் வெற்றிபெற தாயாரின் வாழ்த்து

தேர்தல் பிரசாரத்திற்காக விருதுநகர் வந்துள்ள தமிழக முதலமைச்சர் திரு. காமராஜர். தமது வயது முதிர்ந்த தாயாரைக்கண்டு வாழ்த்துப்பெற்றார்.

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் தமிழக முதல் அமைச்சர் திரு. காமராஜரும், மற்றும் அவர் நிறுத்தியுள்ள அபேட்சகர்களும் வெற்றிபெற வேண்டும் என்று திருமதி சிவகாமி அம்மையார் வாழ்த்துத் தெரிவித்தார்.

## திண்டுக்கலில் தி. மு. க. முன்னள் மேயர்

திராவிட முன்னேற்றக்கழகம் மேலும் ஏழு சட்டசபைத்தொகுதிகளுக்கும் இரு பார்லிமெண்ட் தொகுதிகளுக்கும் தனது

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

அபேட்சகர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. திண்டுக்கல் பார்லிமெண்ட் தொகுதிக்கு திரு. ஷேக் நிறுத்தப்படுவாரென முன்பு கழகம் அறிவித்திருந்தது. இப்போது அதை மாற்றி அங்கு திரு. எம். எஸ். அப்துல் காதர் (முன்னள் மேயர்) நிறுத்தப்படுவாரென அறிவித்துள்ளது.

## தி மு க அபேட்சகருக்கு இருகட்சிகள் ஆதரவு

மதுரை திருப்பரங்குன்றம் சட்டசபைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக்கழக அபேட்சகரான திரு. எஸ். முத்துவுக்கு சுதந்திரக்கட்சி ஆதரவளிக்குமென்று தெரிகிறது. மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரான திரு. எஸ். முத்து, கடந்த தேர்தலில் மதுரை மத்திய தொகுதியில் போட்டியிட்டார்.

சுதந்திராகட்சி-திராவிடமுன்னேற்றக் கழகத்தேர்தல் உடன்பாடு முறிந்துவிட்டபோதிலும் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுதந்திராகட்சியுடன் உடன்பாடு செய்துகொள்ள திரு. எஸ். முத்து தனிப்பட்டமுறையில் முயன்று அதில் வெற்றியடைந்துள்ளார் என்று தெரிகிறது. முன்னேற்றக்கட்சித் தலைவரான திரு. பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவரும் திரு. எஸ். முத்துவுக்கு ஆதரவு கொடுத்துவிட்டதாகவும் தெரிகிறது.

## தி. மு. க. கருணாநிதியை எதிர்த்து சுயேச்சை தி. மு. க.

தஞ்சை தொகுதியில் தி. மு. க. அபேட்சகர் திரு. மு. கருணாநிதியை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட முன்வந்திருக்கும் தி. மு. க. உறுப்பினர் திரு. கரந்தை என். எஸ். சண்முகவடிவேல் தம்முடைய முடிவுக்குரிய காரணங்களை விளக்கி ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கை கூறுவதாவது: இன்னும் நான் தி. மு. கழகத்தவனே. தோழர் கருணாநிதியும் அன்று முதல் இன்றுவரை எனது நண்பர். ஆனல் தேர்தலிலே போட்டியிடக் காரணம் இருவருக்குமிடையே மனவேறுபாடு என்பதாலல்ல. நான் தஞ்சையைச் சார்ந்தவன் என்பதனலும், தஞ்சை கழக உறுப்பினர்களும், எனது நண்பர்களும் பல வாக்காளப் பெருமக்களும் தஞ்சைத் தொகுதிக்கு தஞ்சையைச் சேர்ந்தவரையே அபேடசகராக்க விரும்புகிறார்கள். கடமைகள் எனக்காகக் காத்திருக்கின்றன என்ற முடிவில் சுயேச்சை அபேட்சகனகப் போட்டியிடுவதெனத் தீர்மானித்துவிட்டேன்.

இறுதியாக தஞ்சையிலே நான் போட்டியிடுவது ஒரு உரிமைப் போர். அதற்கு மக்களின் ஆதரவும் அன்பும் பெருகி வெற்றி தேடித் தருமென்றே நம்புகிறேன்.

## திரு. அனந்தசயனம்

லோகசபை சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் ஐயங்கார் (கா) ஸ்ரீ வி. வி. எல். நாராயணன் (சுதந்) இருவரும் சித்தூர் தொகுதியில் லோகசபைக்கு தமது அபேட்சாபத்திரங்களை இன்று தாக்கல் செய்தனர்.

## நாவலர் நெடுஞ்செழியன்

திருவல்லிக்கேணி சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் தி. மு. க. தலைவர் நாவலர் வி. ஆர். நெடுஞ்செழியனை எதிர்த்து திரு. என். எஸ். வரதாச்சாரி (சுதந்திரா) திரு. என். சம்பந்தப்பா (காங்கிரஸ்), திரு. ஆர். முத்துக்கிருஷ்ணன் (சுயேச்சை), திரு. கே. என். நடராஜன் (சுயேச்சை) ஆகியோர் அபேட்சை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

(2ம் பக்கம் பார்க்க)

## பிஸர்ட்டா தளம் பற்றி பேச்சுவார்த்தை நின்றது

பாரிஸ், ஜன. 21

பிஸர்ட்டா தளம்பற்றி பிரான்ஜுடன் நடைபெற்ற பேச்சுக்களை இங்கு வந்திருந்த டுனிஸிய தூதுகோஷ்டி நிறுத்திக்கொண்டது. பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதில் பயனில்லை என்றும், பிஸர்ட்டா தளத்திலிருந்து வெளியேறுவதற்கான ஒரு கெடுவை நிர்ணயிக்க பிரான்ஸ் முன்வரவில்லையென்றும் தூது கோஷ்டி அறிவித்தது.

## அமெரிக்கா ஆதரவு

வாஷிங்டன், ஜன. 20

டொமினிக்கன் குடியரசில் ராணுவஆட்சி கவிழ்க்கப்பட்டு பழைய ஜனதிபதி பலாகுவே மீண்டும் ஜனதிபதியாகப் பதவியேற்றுள்ளது. அங்கு ஜனநாயக ஆட்சி நிலைபெறுவதற்குரிய அறிகுறி யென்றும் டொமினிக்கன் குடியரசுக்கு அமெரிக்கா உதவியளிக்குமென்றும் அமெரிக்க ராஜாங்க இலாகா தெரிவித்தது.

## கென்னடி – யுதாணட் சந்திப்பு

நியுயோர்க், ஜன. 20

அமெரிக்க ஜனதிபதி கென்னடி ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யுதாண்ட்டென் நேற்று இங்கு பேச்சுவார்த்தை நவுத்தினர்.

## கண்டனம்

புதுடில்லி, ஜன. 21

காஷ்மீர் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருப்பது குறித்து எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

## உதவி ஆசிரியர் காலமானர்

சென்னை, ஜன. 20

சென்னை சர்வகலாசாலை தயாரித்துவரும் ஆங்கில—தமிழ் அகராதியின் உதவியாசிரியார்ன திரு. டி. ஏ. வி. நாதன், தன் 58 வது வயதில் இன்று காலமானர்.

## அனதை விடுதி ஸ்தாபனங்கள் கோரும் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

தமது ஸ்தாபனங்களை பதிவு செய்துகொள்வதற்கென அனதைகள் விடுதி ஸ்தாபனங்கள் சில அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தவிண்ணபங்களை அரசாங்கம் நிராகரித்திருந்தது இந்த ஸ்தாபனங்கள் அராசங்கத்தின் தற்போதைய கொமுகைக்கு விளக்கம் தருமாறு சிறுவர்கள் பாதுகாப்புப் பராமரிப்பு இலாகாவைக் டேட்டுள்ளன. புதிதாக அனதைகள் விடுதிகளை அரம்பித்துவைப்பதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கு விளக்கம் தருமாறு இத் தாபனங்கள் இலாகாவைக் கேட்டுள்ளன.

இத்தாபனங்களில் சில பெருந்தொகையான பணச் செலவுடன் விடுதிக் கட்டடங்களை நிறுவிய காரணத்தாலேயே இப்போது அரசாங்கத்தின் கொள்கைக்கு விளக்கம் கோரியுள்ளன.

இரண்டு வருடங்களுக்குமுன்ன்ர் பதிவுசெய்யும்படி சிறுவர்கள் பாதுகாப்புப் பராமரிப்பு இலாகா சிபார்சு செய்த 5 ஸதாபனங்கள் இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

### மணி வாக்கு

ஒவ்வொரு பெண்ணும் தனக்கு ஒரு கூடப்பிறந்த சகோதரி அல்லது தாய் அல்லது மகள் என்கிற எண்ணம் கொண்டுவிட்டால் அந்த எண்ணமே ஒருவனுடைய உள்ளத்தை மேலே தூக்கித்தரும்.

—காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 9உ (22 - 1 - 62)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389


## அடிமை வியாபாரமா?

ஊவாமாகாணத்தில் கன்னிப்பெண்கள் விலைக்கு விற்கப்படுவதாயும், இந்தத் துர்ப்பாக்கியசாலிகள் மேற்குப்பகுதிகளுக்குத் தீயநோக்கங்களுக்குக் கொண்டுவரப்படுவதாயும் பத்திரிகைகளில் வெளியான செய்தி, அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் ஒருகாலத்தில் நடைபெற்ற அடிமை வியாபாரத்தை நினைவூட்டுவதாய் இருக்கின்றது.

பெண்மணி ஒருவரைப் பிரதமராகப்பெற்றுப் புகழ் ஏணியின் உச்சத்தை எட்டிப்பிடித்த இலங்கையிலுமா இந்த இழிதொழில்!

ஊவாமாகாணப் பகுதியில் கன்னிப்பெண்களை முப்பது ரூபாய்க்கும் நாற்பது ரூபாய்க்கும் விலைகூறி வாங்கிக் கொழும்புக்கும் பிறநகரங்களுக்கும் இவர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனராம். இலங்கை விபசார ஒழிப்புச் சங்கத்தின் கூட்டம் ஒன்றிலேதான் அதிர்ச்சியூட்டும் இச்செய்தி அம்பலமாக்கப்பட்டிருக்கின்றது. கடவத்தைப் பகுதிப் பொலிஸார் சமர்ப்பித்த இந்தஅறிக்கையை இலங்கை விபசார ஒழிப்புச் சங்கம் ஆராய்ந்து வருகின்றது. இந்த ஆபாசத்வத முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

ஊவாமாகாணத்தில் ரொடியரும் வேடரும் அதிகமாக வசித்துவருகின்றனர். இவர்கள் உயர்வகுப்பினரால் நாயிலும் கேடாக மதிக்கப்படுவதுண்டு. சில வருடங்களுக்கு முன்னர் ஊவாப்பகுதியிலுள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் ரொடியர் சாதிப்பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டபோது அங்குள்ள உயர்வகுப்பினர் தீவிரமாக எதிர்த்து அவர்களை அப்பள்ளிக்கூடத்தினின்றும் அகற்றிவிட்டுத்தான் மறுகாரியம் பார்த்தனர்.

பொருளாதார நெருக்கடியும் சமூக அநீதிகளும் இவர்களை இன்று அதலபாதாளத்துக்குள் தள்ளிவிட்டிருக்கின்றதென்றே கூறவேண்டும்

பெண்விடுதலைதான் நாட்டின் விடுதலை. மாதர்தம்மை இழிவுபடுத்தும் எந்தச் செயலும் நாட்டின் உயர்வையும் அதன் சிறப்பையும் பாதித்தே தீரும்.

வறுமையின் கொடுமையைத் தாங்கமுடியாமல் வாடும் கன்னிப்பெண்களைத் தகாதசெயல்களுக்குப் பயன்படுத்துவது மகாபாதகமாகும். சட்டமூலம் இந்த அக்கிரமத்துக்குத் தகுந்த நடவடிக்கையைக் கையாளலாமென அரசாங்கம்திருப்தியடையலாம். இத்துறையில் சட்டம் உதவிசெய்வது உண்மைதான். ஆனால், சமூகத்தில் பசியும், பிணியும் பொருளாதார உயர்வு தாழ்வும் நிலவும்வரை இந்த அடிமை வியாபாரம் வேறு இடங்களிலும் பரவத்தான் செய்யும்.

நாட்டின் பலபாகங்களிலுமுள்ள சனசமூக நிலையங்களும் பெண்கள் சங்கங்களும் இத்துறையில் ஆர்வத்துடன் உழைத்துத் தமது சகோதரிகளைப் படுகுழியில் வீழாது காப்பாற்றலாம்.

இலங்கை விபசார ஒழிப்புச் சங்கம் நிலைமையை நன்கு பரிசீலனை செய்வதுடன், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இந்த அடிமை வியாபாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதை நாடு வரவேற்கும்.

# மக்கள் வங்கியில் முதலீடு அதிகரிப்பு

## வங்கிவேலைநிறுத்தத்தின் எதிரொலி

கொழும்பு, ஞாயிறு

ஏனைய வங்கிகளில் செய்த வேலைநிறுத்தத்தால் மக்கள் வங்கியின் கிளைகளில் பலர் அதிக பணத்தை முதலீடு செய்துள்ளார்கள். மக்கள் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை 30 லட்சம் ரூபாய்வரை இருக்குமென மக்கள் வங்கி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கோழிப்பண்ணை, மரவேலை போன்ற சிறு கைத்தொழில்களுக்கு மக்கள் வங்கி கடனாகப் பணம் வழங்குவதுண்டு.

கிளைகள் மூலமாகப் பெருமளவில் நகை அடைவு பெற்றுக்கொள்வதிலும் மக்கள் வங்கி ஈடுபட்டுவந்துள்ளது. புத்தளம், மாத்தளை அம்பாந்தோட்டை ஆகிய இடங்களுள்ள கிளைகள் மூலமாக்வே மக்கள் வங்கி இதைச் செய்துவந்தது.

மக்கள் வங்கி புதிய கிளைகள் பலவற்றை விரைந்து நிறுவி வருவதாகத் தெரியவருகிறது. பெப்ரவரி 2ம் திகதியன்று குருநாகலில் புதிய கிளை யொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. மார்ச் மாதத்தில் காலியிலும் ஒரு புதிய கிளை ஆரம்பிக்கப்படும். பலாங்கொடை, கம்பஹா, கல்முனைப் பகுதிகளிலும் புதிய கிளைகள் ஸ்தாபிக்கப்பட விருக்கின்றன.

வங்கி வேலைநிறுத்தம் ஆரம்பித்தகாலம் தொடக்கம் பெரும் தொகையான பணத்தை கூட்டுறவுச் சங்கங்கள மக்கள் வங்கியில் முதலீடுசெய்துவருவதாகத் தெரிகிறது.

### லாவோஸ்

# தேசிய அரசாங்கம் அமைக்க இளவரசர்கள் உடன்பாடு

## நடுநிலைமைத் தலைவர் பிரதமர்

ஜெனிவா, ஜன.20

லாவோசில் தேசிய கலப்பு அரசாங்கம் அமைப்பதற்கு லாவோசின் முத்தரப்பு இளவரசர்களுக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

சில விஷயங்களில் இன்னும் உடன்பாடு உடன்பாடுஏற்படவேண்டியிருக்கின்ற போதிலும் விரைவில் அவைகளுக்கு தீர்வு காணப்பட்டு விடுமெனத்தெரிவிக்கப்பட்டது.

இப்பொழுது ஏற்பட்டுள்ள ஏற்பாட்டின் நடுநிலைமைமத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா தலைமையில் 10 அங்கத்தவர்களைக்கொண்ட மந்திரிசபை அமைக்கப்படும். வலதுசாரித்தலைவர் இளவரசர் பூன் கோஷ்டியினருக்கு மந்திரிசபையில் நான்கு பதவிகளும் இடதுசாரித் தலைவர் இளவரசர் சுவன்னவாங் கோஷ்டியினருக்கு மந்திரி சபையில் நான்கு பதவிகளும் அளிக்கப்படும்.

தங்களுக்குள் ஏற்பட்டுள்ள உடன்பாடு உறுர்யான அடிப்படையில் லாவோசில் அரசாங்கம் உருவாகுவதற்கு வழிசெய்துள்ளதெனறு இளவரசர் சுவன்னபூமா தெரிவித்தார்.

## உளவு வேலையில் பல்கேரிய விமானம்

ரோம், ஜன 21

ரஷ்யாவில் கட்டப்பட்ட பல்கேரிய ஜெட் விமானம் ஒன்று நொறுங்கி விழுந்ததாயும் அதில் மிஷின் பீரங்கிகளும், புகைப்படக்கருவிகளும் காணப்பட்டனவென்றும் இத்தாலிய பொலிஸார் அறிவித்தனர். விமானி, காயத்துடன் தப்பியிருப்பதாயும் இது உளவு வேலையா என்பதுபற்றி விசாரணை நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## அல்ஜீரியாவில் மேலும் 27 பேர் மாண்டனர்

அல்ஜியர்ஸ், ஜன 21

அல்ஜீரியாவில் நேற்று ஏற்பட்ட கைகலப்பில் 27 பேர் மாண்டனர்.

## வசந்தகானசபை இயக்குநருக்கு பொற்கிழி

### கமிட்டி நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற 25 வருடகாலமாக கொட்டகைக் கூத்தை வளர்த்தவரும் வசந்தகானசபையின் இயக்குநருமான திரு வைரமுத்துவுக்கு 17-3-62-ல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் பொற்கிழி பரிசளிப்பு வைபவம் நடைபெறும். அதற்காக பின்கண்ட ஆலோசனைக் குழு தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

தலைவர் கலையரசு சொர்ணலிங்கம், உபதலைவர் இசைப்புலவர் சண்முகரத்தினம், மயிலிட்டி கிராமச்சங்கத் தலைவர் பாஸ்கரன், இ. மகாதேவா, (தேவன்) காரியதரிசி கனக. செந்திநாதன், மா. குமாரசாமி, தனதிகாரிஏ. ரி. பொன்னுத்துரை.

## அமெரிக்காவில் பௌத்த நிலையம் அமைக்க முயற்சி

வாஷிங்டன், ஜன. 21

அமெரிக்காவில் ஒருபௌத்த கோவிலையும் கலாச்சார நிலையத்தையும் நிறுவுவதென அமெரிக்காவிலுள்ள பௌத்த நிலையம் திட்டமிட்டுள்ளது.

இச்செய்தியை அமெரிக்காவிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. எச். ஈ. டபிள்யூ. கோபல்லாவவும் திரு. ஜோசெப். எல். ஸ்டீவன்ஸும் வெளியிட்டார்கள். புதிய இத்திட்டத்துக்கு 50 லட்சம் டாலர் செலவிடப்படும்எனப் பௌத்தநிலையத்தின் உபதலைவர்களான இவர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில், பௌத்த நிலையம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 70—80 அடி உயரம் கொண்ட பௌத்த விக்கிரகம் ஒன்றை அலுமீனியத்தில் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுவருகிறது. தாமரை உருவமான பீடத்தில் இந்த விகிரகம் அமைக்கப்படும் எனத் தெரிகிறது.

பௌத்தகொள்கைகள் சமுதாய வளர்ச்சியை உருவாக்கிய மாதிரியை ஆராய்ந்து படிக்கும்வழிசெய்வதும், ஆசிய அமெரிக்க மக்களின் உறவை வளர்ப்பதுமே புதிய திட்டத்தின் குறிக்கோளாகும்,

## அல்ஜீரியாவில் 1000 பேர் மாண்டனர்

நியுயோர்க், ஜன. 21

அல்ஜீரியாவில் சென்ற மூன்று வாரங்களில் தேசியவாதிகளிக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையில் நடைபெற்ற கலகங்களுல் மொத்தம் ஆயிரம் பேர் மாண்டிருக்கலாமென்று நம்பப்படுகிறது.

# சுகர்னேவின் சமரச சமிக்ஞை

## யு தாண்டுக்கு ஜனதிபதி பதில்

நியூயோர்க், ஜன .

**மேற்கு இரியன் சம்பந்தமாக ஹாலந்துடன் சமரச பேச்சுவார்த்தைக்கு இன்னும் இடமிருக்கிறதென ஜனதிபதி சுகர்னே ஐ. நா. தலைமைக் காரியதரிசிக்கு அறிவித்திருக்கிருர்.**

ஐ. நா. விலுள்ள இந்தோனேஷியப் பிரதிநிதியை திரு. யுதாண்டுடன்தொடர்புகொண்டிருக்குமாறும் ஜனதிபதி உத்தரவிட்டிருக்கிருர்.

சமாதானத் தீர்வுக்கு இந்தோனேஷியா இயன்றதை எல்லாம் செய்துவந்ததென்றும், ஆனல் டச்சுக்காரர்கள் நடத்திய திடீர்த்தாக்குதல் இந்தோனேஷிய மக்களின் கோபத்தைத் தூண்டிவிட்டிருக்கிறதென்றும் ஜனதிபதி யுதாண்டுக்குத் தெரிவித்திருக்கிருர்.

இந்தோனேஷிய கடல் உரிமையை மீறும் எந்தக் கப்பலையும் சுடுமாறும் கடற்படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# கிஸங்கா லியபோல்ட்விலி கொண்டுவரப்பட்டார்

லியப்போல்ட்வில்லி, ஜன 21

வட கொங்கோலாவில் ஐ. நா. ஜெட் விமானங்கள் மீது காங்கோ துருப்புக்கள் சுட்டதாகவும் ஐ. நா. விமானங்கள் திருப்பிச்சுடவில்லை என்றும் ஐ. நா. பிரதிநிதி ஒருவர் கூறினர்.

முன்னுள் காங்கோ உதவிப் பிரதமர் திரு. கிஸங்கா, ஐ.நா. விமானமூலம் லியப்போல்ட்வில்லிக்குக்கொண்டுவரப்பட்டிருக்கிருர்.

அங்குள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் திரு. கிஸங்கா தங்கியிருக்கிருர்.

## உதவி மேயர்

### சமாதான நீதவானுக சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபை உதவிமேயரான திரு. ஆ. துரைராசசிங்கம் நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு அரசுவால்டன் முன்னிலையில் சமாதானநீதவானுகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## ஐயாறன் எழுதுவது

மொத்தம் ஆறு பேர்களை இலங்கையிலிருந்து பாரதத்தாய் அழைத்திருந்தாள். "தவஸ" எனும் புதிய சிங்கள தினசரிப் பத்திரிகையின் கூட்டாசிரியர் பியால் விக்ரமசிங்க, ஜனதா (சிங்கள தினசரி) எச். கே. மகிந்ததாஸ், 'டைம்ஸ் ஆப் ஸிலோன்' தலையங்கம் எழுதுபவரான டி பி. உடலகம, ரேடியோ ஸிலோன் டைரக்டர் ஜெனரல் ஜெரா டி' மெல், இலங்கையிலுள்ள இந்திய தகவல் இலாகா சேவையைச் சேர்ந்த ஸிரில் பி. பெரேரா இவர்களையும் ஈழநாடு சார்பாக என்னையும் அழைத்திருந்தார்கள்.

எதிர்பாராத காரணத்தால் ரேடியோ ஸிலோன் டைரக்டர் ஜெனரல் கடைசி நேரத்தில் வரமுடியாமற் போயிற்று ஆகவே எழுவர் அறுவரானேம்.

* * *

சுமார் 2-15 மணிக்கு திட்டப்படி ரத்மலானையில் நாங்கள் கூடினேம் டைம்ஸ் பிரதிநிதியின் சின்னப் பெண் குழந்தை தன் தகப்பனரை வழியனுப்ப வந்திருந்தாள். "அப்பா! பேப்பர்காரர்களைக் கூப்பிட்ட இந்திய அரசாங்கம் அவர்களது குழந்தைகளைக் கூப்பிடாமல் ஏன் விட்டார்கள்?" என்று தன் தகப்பனரை ஒருவித ஏமாற்றத்துடன் கேட்டது. பாவம்! அக்குழந்தைக்கும் இந்தியாவைப் பார்க்க வேண்டுமென்று அவ்வளவு ஆவல். குழந்தையின் யோசனையை இந்திய அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதாக ஆறுதல் கூறினேன்.

டைம்ஸ் உடலகமவுக்கு 50 வயதுக்கு மேலிக்கும். அவரே இப்போதுதான் முதல் முதலாக இந்தியாவைப் பார்க்கிருராம்! பத்திரிகைக்காரர்களுக்கு யாத்திரைதான் சரியான கல்வி மற்ற நாடுகளில் பேப்பர்காரர்களுக்கு பிரயாணத்துக்கு சலுகைக் கட்டணங்களும், இலவச பிரயாண வசதியும் அளிக்கப்படுகிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் அவ்விதம் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்வித வசதி அளிப்பதால், பத்திரிகைக்காரர்கள் விஷயங்களை நன்கறிந்து எழுதலாம். அறியாமையால்தான் தப்பெண்ணங்கள் ஏற்படுகின்றன. பொதுமக்களின் கருத்தை உருவாக்கும் பேப்பர்காரர்கள் முதலில் தாங்கள் நல்லெண்ணமுள்ளவர்களாகவும் தப்பெண்ணங்கள் இல்லாமலும் இருக்க வேண்டும்.

* * *

அந்தவகையில் இந்திய அரசாங்கம் முதல்முதலாக இலங்கைப் பத்திரிகைக் கோஷ்டியை இந்தியாவுக்கு அழைத்து உபசரிப்பது, பெரிதும் உதவியாக இருக்கவேண்டும். இனி ஒவ்வொரு வருடமும் இவ்விதம் வேறுஇலங்கைப் பேப்பர்காரர்களை அழைப்பதுடன் இலங்கையும் இந்திய பேப்பர்காரர்களை அழைத்து இலங்கையின் உண்மை நிலையைக் காட்டுவதாயின், இருதேச தப்பெண்ணங்களும் நீங்கி, நல்லுறவுகள் பலப்பட இதனல் வழி பிறக்லாம். இந்த ஏற்பாட்டை பல வருடங்களுக்கு முன்பே செய்திருக்க வேண்டும். இப்போதாவது செய்தது நல்லது.

* * *

எங்களை வழியனுப்பிவைக்க ரத்மலானைக்கு இந்திய ஹை கமிஷன் தகவல் அதிகாரியான ஜா எனும் வாலிபர் வந்திருந்தார். ஆஜனுபாகுவா ஐ. நா. சபையிலே இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியான ஜா என்பவரின் புதல்வராம் இவர். இது 'ராஜ தந்திரிகள் குடும்பம்' போலும்!

இலங்கை கஸ்டம்ஸ்அதிகாரி பெட்டியைத் திறக்காமலே பாஸ் செய்துவிட்டார்! 'எல்லாரும் சிங்களவர் தானே'

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘புலவர் பெருமக்களை பாராட்ட வேண்டும்’

## பாராட்டுவிழா அமைப்புக்கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

“புலவர் பெருமக்களைப் போற்றிப் பாதுகாக்கவேண்டியது நமது கடமையாகும். அவர்கள் அறிவைப்பயன்படச் செய்து நமது சமூகத்தையும் மொழியையும் பாதுகாத்து வரவேண்டியதும் அவசியமாகும். வித்துவான் சுப்பையபிள்ளை முத்தமிழ்ப்புலவராய் விளங்கி வருவதோடு சைவ சமயத்துக்கும் அரிய பல தொண்டுகளையும் செய்துள்ளார்.”

இவ்வாறு சனிக்கிழமை வண்ணை நாவலர் வித்தியாசாலையில் நடைபெற்ற வித்துவான் ந. சுப்பையபிள்ளையின் பாராட்டுவிழா ஆலோசனைக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை தமது தலைமையுரையிற் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

வித்துவானுக்குப் பாராட்டு விழா செய்து கௌரவிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கென ஓர் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

போஷகர்கள்: திரு. சு நடேசபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம், டாக்டர் சே சிவப்பிரகாசம், கலைப்புலவர் க. நவரத்தினம், பண்டிதமணி அ. பெரியதம்பிப் பிள்ளை. தலைவர்: வித்துவான் க. கார்த்திகேயன். உபதலைவர்கள்: பண்டிதர் க யோ. ஆசிநாதன், வித்துவான் இ. பொன்னையா, பண்டிதர் செ. துரைசிங்கம், வித்துவான் சி இ. கந்தசாமி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, வித்துவான் கா. கி. நடராசன். இணைக் காரியதரிசிகள்: பண்டிதர் இ. திருநாவுக்கரசு, பண்டிதர் க. வீரகத்தி. இணைத் தனாதிகாரிகள்: திரு. மு வைத்திலிங்கம், பண்டிதர் க. நாகலிங்கம்.

கமிட்டி உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அடுத்துவரும் சனிக்கிழமை நிர்வாக சபை கூடி பூர்வாங்க முடிபுகளைச் செய்வதெனவும் முடிபு செய்யப்பட்டது.

### கலைப்புலவர் ஆசிச்செய்தி

வித்துவான் ந சுப்பையாபிள்ளையின் பாராட்டு விழா குறித்து கலைப்புலவர் திரு க. நவரத்தினம் அனுப்பியுள்ள ஆசிச் செய்தியின் சாராம்சம் பின்வருமாறு:-

“பண்டிதமணி, வித்துவான் அவர்களுக்குப் பாராட்டுவிழா நடத்தவேண்டியது மிக அவசியமாகும். அவ்விழா வெறும் விழாவாகஇராது தக்கபொருளுதவிசெய்து கௌரவிக்கும் பெருவிழாவாக அமையவேண்டும். அவரது பொருள்முடையைக்கவனித்து தக்கபடி உதவினால் அன்னாரைக்கொண்டு அரியபல தமிழ்த்தொண்டுகளை செய்விக்கலாமென்பது எனது கருத்தாகும். இதற்கு என்னால் ஆகவேண்டிய சகல உதவிகளையும் செய்துதவவும் தயாராக இருக்கின்றேன்.”

# “புத்த தர்மத்துக்கு மாறான செயல்”

## மரணதண்டனை திருத்த மசோதா பற்றி காலி எம். பி.

கொழும்பு, ஞாயிறு

மரண தண்டனை விசேஷ திருத்த மசோதா பௌத்த மதக்கொள்கைக்கு மாறானது எனவும் பௌத்தநாடு ஒன்றிலிருந்தே இச் சட்ட மசோதா எழுந்துள்ளமை அதிர்ச்சியூட்டுகின்றது எனவும் திரு. டபிள்யு தஹநாயக்கா எம். பி. கூறியுள்ளார்.

“இம் மசோதா பாபம் மிக்கது. புத்ததர்மத்துக்கு முழு மாறானது கிரகங்கள் கூடுவதையிட்டு எல்லோரும் பிரார்த்தனைகள் நடாத்தும் இந்தச் சமயத்தில் இப்படிப்பட்ட ஒரு மசோதாவை நிறைவேற்ற நினைப்பது தவறு. பெரும்பாலும் இந்த மசோதாவை பார்லிமெண்ட் எம். பி. க்கள், குறிப்பாக அரசாங்க எம். பி. க்கள் ஆதரிக்காதிருக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பௌத்த காங்கிரஸ் போன்ற ஸ்தாபனங்கள் உண்மையில் பௌத்த சார்புடையன வென்றால் மசோதாவை வாபஸ் செய்து வைப்பதற்கு வழிவகுக்கவேண்டும்.

# வேட்டைக்குச் சென்றவர்கள் தாக்கப்பட்டனர்

கொழும்பு, ஞாயிறு

வில்பத்துக் கிழக்கைச் சேர்ந்த வன இலாகா காவலாளிகள் இருவரையும் ‘கார்ட்’ ஒருவரையும் கள்ளத்தனமாக வேட்டைக்குச் சென்ற சிலர் அடித்துக் கட்டி வைத்துவிட்டு அவர்களிடமிருந்த பணம் பொருள்கள் எல்லாவற்றையும் பறித்துச் சென்றுவிட்டனர் என வன இலாகாவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவம் நடைபெற்றதைத் தொடர்ந்து சில தினங்களாக மூன்று பேரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தனர்.

மகாவில்லாச்சி குடியேற்றப் பகுதியிலுள்ள ஐவரை இது சம்பந்தமகப் பொலிஸ் விசாரணை செய்தது.

வில்பத்து கிழக்குப் பகுதியில் பலதடவைகள் கள்ளத்தனமாக மக்கள் வேட்டையாடியுள்ளனர் என வன இலாகா அதிகாரி திரு ஏ. பக்கீர் கூறியுள்ளார்.

## மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

பருத்தித்துறை, வெள்ளி

புதிய வீடொன்றுக்கு மின்சார இணைப்பு ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுள் ஒருவரான திரு. ஏ. தியாகராசா அல்லது சின்னத்தம்பி என்றழைக்கப்படும் ஒருவர் மின்சார அதிர்ச்சியால் மணரம் அடைந்தார்.

இவர் 14 வருடங்களாக பருத்தித்துறைப் பட்டின சபையில் வேலை செய்துவந்தார்.

மின்சாரக் கம்பத்தில் இருந்து தூக்கி எறியப்பட்ட இவரை வைத்திய சிகிச்சைக்கு எடுத்துச் சென்றபோது மரணம் அடைந்தார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. தம்பிப்பிள்ளை விசாரணை நடத்தினர். தற்செயலாகச் சம்பவித்த மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# மன்றங்களுக்கிடையே நாடகப் போட்டி

## பிரதேச கலாமன்றம் முடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்-பிரதேச கலைமன்ற நாடகக் குழுவின் நிர்வாகக் கூட்டம் யாழ்ப்பாணம் 1-ம் குறுக்குத் தெருவிலுள்ள அதன் அலுவலகத்தில் கலையரசு க. சொர்ணலிங்கம் தலைமையில் கூடியது. 1962-ம் ஆண்டுக்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாடக மன்றங்களுக்கிடையே நாடகப் போட்டி வைப்பதென்றும் அதற்காக நாடகமன்றங்களை மேற்படி குழுவுடன் தொடர்பு கொள்ளும்படியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஓறியன்ஸ் மன்றத்துப் ‘பூதத்தம்பி நாடகம்’, வட்டுக்கோட்டைப் பகுதியில்உள்ள நாட்டுக்கூத்துக்களை மேடையிடுவது பற்றியும் அதற்குத் தேவையான நிதிபற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# பரிசில்பெறும் சிறுகதை எழுத்தாளர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் - இளம் எழுத்தாளர் சங்கம் 1961ம் ஆண்டு ஐப்பசி மாதம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பின்வருவோர் பரிசு பெறுகின்றார்கள். 1வது பரிசாகிய தங்கப்பதக்கத்தை, யாழ்ப்பாணம் செ. யோகநாதனும், இரண்டாவது பரிசாகிய வெள்ளிப் பதக்கத்தை யோ. பெனடிக்ரும், மூன்றாவது பரிசாகிய பாக்கர் பேனாவைவெள்ளவத்தை கு. விஜயனும் பெறுகின்றார்கள். இந்தமுதல்மூன்று கதைகளையும்தவிர்ந்த இன்னும் ஏழுகதைகளைச் சேர்த்துத் தொகுப்புநூலாக வெளியிட மேற்படிசங்கம் தீர்மானித்துள்ளது.

# ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அந்த அதிகாரி கேட்டதும், ‘இதோ ஒரு தமிழன் இருக்கிறேன்’ என்றேன்.

அங்கிருந்தே நாங்கள் இந் அரசாங்க விருந்தினர்! அதனால் அதிகாரி ஜா விமானம் வரை வந்து வழியனுப்பினர். விமானமும் சரியாக 3-10க்கு கம்பீரமாகப் புறப்பட்டது.

விமானத்தில் பாதி ஸீட்டுகளுக்கு மேல் காலி. 5 வருடங்களுக்கு ஒரு முறையே விமான பிரயாணம் செய்யலாமென்று போட்டுள்ள ஒரு பைத்தியக்கார தடைச் சட்டமே இதற்குப் பெரிதும் காரணமாகும்.

அது வைகவுண்ட் விமானம். 55லட்ச ரூபாய் விலையாம். உள்நாட்டு யாத்திரைக்கு இவ்வளவு வசதியான விமானங்கள் அமெரிக்காவில்கூட கிடையாமென்கிறார் அங்கு சென்று திரும்பிய சிங்கள ஆசிரியர்.

பேசிக்கொண்டே வந்தோம். ஒன்றரை மணி நேரமும் போனதே தெரியவில்லை. சென்னைவந்துவிட்டது. பெல்ட் கட்டிக்கொள்ளுங்கள் என்று ஒலிபெருக்கியில் அறிவித்தனர். 375 மைல் தூரத்தையும் அவ்வளவுசீக்கிரம் கடந்து சென்னை இறங்கினோம்.

டில்லியிலிருந்து ஓர் அதிகாரி ஸ்பெஷலாக வந்து எங்களை வரவேற்றார். எங்கள் பெட்டிகள் கஸ்டம்ஸ் அறைக்கே வரவில்லை. அதைப் பார்க்காமலே எல்லாம் பாஸ். விருந்தினரல்லவா நாங்கள். கஸ்டம்ஸ் உபத்திரவம் எப்போதும் இல்லாமல் இப்படியே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

பாரத புண்ணிய பூமியில் இறங்கியதும், பாரத அன்னைக்கு அஞ்சலி செய்து விட்டு நேரே மகாவலிபரத்துக்குக் காரில் புறப்பட்டோம்.

# “வேற்றுமையை ஒழிக்கவே தனித்தனி பிரிவினை”

## இன ஒதுக்கல் பற்றி தென்னாபிரிக்க ஜனாதிபதி

கேப்டவுன், ஜன. 21

இனம் அல்லது நிறம்காரணமாக மக்களை ஒதுக்குவதோ அல்லது பட்சபாதமாக நடத்துவதோ அரசாங்கத்தின் கொள்கையல்ல. ஆனால் வெள்ளையரையும், வெள்ளையரல்லாத வகுப்பினரையும் வெவ்வேறுகப் பிரித்துவைப்பதன்மூலம் வேற்றுமையை ஒழிப்பதே கொள்கையாகும் என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி சார்லஸ் வார்ட் இங்கு கூறினார். பார்லிமெண்டின் புதுக்கூட்டத்தொடரைத் துவக்கிவைத்து அவர் பேசினார்.

ஜனாதிபதி ஸவார்ட் மேலும் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு: அவரவர் பிரதேசத்தில் அவரவருக்கு முழுஉரிமைகள் வழங்குவதுடன் மற்றொருவரின் பிரதேசத்தில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் அதேவிதமான கட்டுப்பாடுகளை விதிப்பதும் இதோடு சேர்ந்துவந்தாக வேண்டும்.

எல்லோருக்கும் முழு அரசியல் வாக்குரிமை வழங்குமாறு நிர்ப்பந்தம் செய்கிறார்கள். இந் நோக்கத்துக்கு முக்கியமான பக்கபலம், உலக ஆதிக்கத்தை நாடும் கம்யூனிஸ்டு கொள்கையேயாகும். ஆனால் நிலைமைக்கேற்ப நடந்துகொள்வதானது தேசிய தற்கொலைக் கொப்பாகும். வெள்ளையர்கள் நீதியைப் பலி கொடுக்க நேரிடும்.

இனங்களுக்குள் நல்லுறவே முதல் நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால் பொதுவான பல இனத்தவர்கள் வாழும் ஒரே தந்தையர் நாட்டில் வெள்ளையரல்லாதார் மீது முழுதும் வெள்ளையர் ஆதிக்கத்தின்மூலமோ அன்றி சிறுபான்மையோர் கோஷ்டிகள்மீது கறுப்பர் ஆதிக்கத்தின் மூலமோ இதை அடையமுடியாது. சமாதானம், சாந்தம், நல்லுறவை நிலைநாட்ட ஒவ்வொரு இனத்தவரும் தெளிவான திட்டமிட்ட வழியைப் பின்பற்றி, அந்தந்த இனத் தொகுதிக்கு தகுதியான சுயாட்சி முறையை நோக்கி முன்னேற வேண்டும்.

# உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு தை மாதம் 9 ந் தேதி திங்கட்கிழமை (22-1-1962) இரவு 3-53 வரை துதியை. இரவு 9-38 வரை ஆயிலியம். சித்தயோகம், தெய்வாராதனை, நவக்கிரக சாந்தி-அருச்சனை வணக்கங்கள் செய்யலாம். ஆபரணாதிகள், தானியவகைகள், கட்டட சாமான்கள் முதலியன கொள்ள-விற்க நலம். வெற்றிலைக் கொழுந்து நட (10-57 முதல் 11-24 பகல்), கிழங்கு வெங்காயம் நட, கிணறு குளம் தோண்ட, கட்ட நல்ல நாள்.

## இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் ஜனனமானவர்களுக்கு இவ்வாண்டு சித்திரை முதல் ஆனி முடிய மிகவும் நன்றாக இருக்கும். ஆயினும், இடையிடையே சிறிது கஷ்டங்களும் இருக்கும். பெப்ரவரி நடுப்பகுதிவரை ஓரளவு வியாழ சுகம் இருக்கிறதால் சிறிது நற்பலன் இருக்கும். நஷ்டம், விபத்துக்கள், கஷ்டமான நீண்ட தூரங்களுக்குப் பிரயாணம் செய்ய நேரும். சச்சரவுகள், தேகநலக் குறைவு, வீரிய நஷ்டம், மன அமைதியினம் ஆகியன, கஷ்டமான காலத்திலும் சந்தோஷம், விசேட நற்கருமங்கள் நடத்தல், நன்மைகளும் செல்வாக்கும் கிடைத்தல், பண வரவு ஆகிய சுப காலத்திலும் இவ்வாண்டில் நடக்கும். முயற்சிகளில் வெற்றி கூடகுறித்த சுபகாலத்தில் நடக்கும். குடும்பத்தில் ரோக கஷ்டங்கள் காணப்படுகின்றன. இரத்த அமுக்க அதிகரிப்பு, உட்டண ரோகம் ஆகியன ஆண்டின் நடுப்பகுதியில் இருக்கும், பண முடக்கம் செய்ய வேண்டாம், பெண்களுக்கு இவ்வாண்டு அதிக நன்மையிருக்குமென்று கூற இயலாது, தெய்வ வழிபாடு அவசியம்.

| நட்சத்திரம் | பலன் |
|---|---|
| அச்சுவினி | பண வரவு, முயற்சி பலிதம், மனவூக்கமதிகரிப்பு. |
| பரணி | கடன் வரவு, கஷ்டங்கள் குறைதல், நிம்மதி. |
| கார்த்திகை | உடற் சோர்வு, உணவில் வெறுப்பு, வைத்தியச் செலவு. |
| ரோகிணி | செய்தொழில் ஊக்கம், தேகநலம், கஷ்ட நீக்கம். |
| மிருகசீரிடம் | மனச் சஞ்சலம், எதிரிகளால் கஷ்டம், பண நஷ்டம். |
| திருவாதிரை | செல்வாக்கு அதிகரிப்பு, இலாபங் கிடைத்தல், முயற்சி ஊக்கம். |
| புனர்பூசம் | அலைச்சல், குடும்பச் சச்சரவு, உணவுக் கஷ்டம். |
| பூசம் | குடும்ப சந்தோஷம், குழந்தைகளால் நன்மை. பண வரவு. |
| ஆயிலியம் | முயற்சி மந்தம், பணக் கஷ்டம், வீண் பொழுது கழிதல். |
| மகம் | குடும்ப சுகம், தெய்வ வழிபாடு, சந்தோஷம். |
| பூரம் | பண வரவு, பொருள் சேகரிப்பு, சுகம். |
| உத்திரம் | குடும்பச் சச்சரவு, சுபகாரியத் தடை, சஞ்சலம். |
| அத்தம் | பொருள் உதவி, செய்காரிய நன்மை, வசதி. |
| சித்திரை | கடன் பயம், செய்தொழில் கஷ்டம், செலவு. |
| சுவாதி | தெய்வ வழிபாடு, குடும்ப சுகம், நன்மை. |
| விசாகம் | பணக் கஷ்டம், செலவு, குடும்பத் தொல்லை. |
| அனுஷம் | பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி, நன்மை. |
| கேட்டை | பணக் கஷ்டம், துக்க செய்தி கேட்டல், செலவு. |
| மூலம் | குடும்ப சுகம், பண வரவு, குல நன்மை. |
| பூராடம் | செய்தொழில் அனுகூலம், சித்தி, உதவி கிடைத்தல். |
| உத்தராடம் | செலவு அதிகரிப்பு, ஆடம்பரத்தால் நஷ்டம், பிரயாணக் கேடு. |
| திருவோணம் | காரிய சித்தி, மதிப்புயர்தல், சந்தோஷம். |
| அவிட்டம் | நண்பரால் செலவு, தெய்வ நம்பிக்கை, சுகம். |
| சதயம் | செய்தொழில் வெற்றி, ஊக்கம், நன்மை. |
| பூரட்டாதி | அதிக ஆசை, ஏமாற்றம், ஊக்கக் குறைவு. |
| உத்தரட்டாதி | சந்தோஷம், பண வரவு, உறவினர் - நண்பர் சேர்கை. |
| ரேவதி | ஆடம்பரத்தால் செலவு, அனாவசிய சிந்தனை, கஷ்டம். |

# அனுதரவாகக் கிடந்த ஒருவாரக் குழந்தை

## 5 பிள்ளைகளின் பெற்ருேர் பொறுப்பேற்றனர்

கொழும்பு, ஞாயிறு

பிறந்துஒருவாரமகூட ஆகாத குழந்தையொன்று குரைக்கும் நாய்களுக்கு மத்தியிலே புல்லுப் பற்றைக்குள் மறைந்து கிடக்கக் கண்டெடுக்கப்பட்டது.

தம்பெரவில்லா தும்புத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் திரு. டபிள்யு. ஜோர்ஜ் பெர்ணண்டோ என்பவரே பிரஸ்தாப குழந்தையைக் கண்டெடுத்தார். வேலைத்தளத்தில் நிற்கும்போது குழந்தையொன்றின் அழுகை திரு பெர்ணண்டோவின் காதில் விழவே சத்தம்வந்த திசையை நோக்கிச் சென்று பார்த்தார். நன்ருக வளர்ந்துள்ள புல்லுப்பற்றைக்கு அடியில் ஒரு பச்சைக் குழந்தை காணப்பட்டது. குழந்தையைச் சுற்றிவர நாய்கள்நின்று குரைத்துக்கொண்டு நின்றன. பெர்ணண்டோ அக்குழந்தையை உடனேயே எடுத்துச் சென்று வென்னப்புவாப் பொலிஸாரின் அனுமதியுடன் குழந்தையின் பெற்ருேரைக் காணும்வரை தானே அதை வைத்திருபபதாகத் தீர்மானித்தார். பெர்ணண்டோ விவாகமாகாதவராகையால் அதே தும்புத் தொழிற்சாலையில் சிறுவேலை செய்யும் பி. வில்லியம் பெர்ணண்டோ தம்பதிகள் பாதுகாப்பில் குழந்தையை ஒப்படைத்தார். வில்லியம் தம்பதிகளுக்கு 5 குழந்தைகள் இருந்தபோதும் இந்தக்குழந்தையை உடனேயே ஏற்றுக் கொண்டனர்.

## சென். அன்ரனிஸ் கிளப் வெற்றி

சுன்னுகம், ஞாயிறு

சுன்னுகம் சென். அன்ரனிஸ் கிளப்புக்கும் சுன்னுகம் சென். ஜேம்ஸ் கிளப்புக்குமிடையில் நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென் அன்ரனிஸ் கிளப் 3—2 கோல்களால் சென். ஜேம்ஸ் கிளப்பைத் தோற்கடித்தது.

## சனசமூகநிலையம் தீர்மானம

ஊர்காவற்றுறை, ஞாயிறு

"வேலணை-ஊர்காவற்றுறை ரஸ்தாவையும் பண்ணை-ஊர்காவற்றுறை ரஸ்தாவையும் இணைக்கும் சரவணை குறுக்குத் தெரு மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்குக் கஷ்டமாக இருக்கிறது. பாடசாலைப் பிள்ளைகளுக்கும், பஸ் பிரயாணிகளுக்கும் மிகப் பிரதானமான இவ்வீதி உடனடியாகத் திருத்தம் செய்யப்படவேண்டும்."

இவ்வாறு போக்குவரத்து மந்திரியையும், தீவுப் பகுதி எம். பி. யையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற சரவணை சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## நியமனம்

முள்ளியவளை, ஞாயிறு

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து, ஜனுப் எம். எல். எம். இபுருகிம், என். எம். சரிபுதீன் ஆசிரியர்கள், தண்ணீரூற்று முஸ்லிம் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மன்னர் ஆஸ்பத்திரிகளின்தேவை

## மகாநாட்டில் ஆலோசனை

மன்னர், ஞாயிறு

வவனியாப்பகுதிச் சுகாதார சேவை சுப்ரீண்டனும் மன்னர் டி. எம். ஓ வும் மன்னர் எம்.பி. திரு. வி. ஏ. அழகக்கோனுமாகக் கூடிய மகாநாடொன்றில் மன்னர் ஆஸ்பத்திரிகளின் தேவைகள்பற்றி மன்னர் எம். பி. திரு. அழகக்கோன், சுகாதாரசேவை சுப்ரீண்டனுக்கு எடுத்துரைத்தார். அரசாங்க ஆஸபத்திரிக்கும் ஏனைய வைத்திய நிலையங்களுக்கும் தேவைப்படும் உபகரணங்கள் வசதிகள்பற்றியும் எம். பி. சுகாதார சேவை சுப்ரீண்டனுக்கு எடுத்துக்கூறினர்.

அரசாங்க ஆஸ்பத்திரியில் புதிதாக நிறுவப்பட்ட வார்ட்டுக்கு உடனடியாகவே தளபாட வசதிகள் வழங்கப்படல் வேண்டும் எனவும் நோயாளிகள் உபயோகத்துக்கு அவை விரைவிலேயே வழங்கப்பட வேண்டுமெனவும் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

சத்திரசிகிச்சைக்கென அரசாங்க ஆஸபத்திரியில் நிறுவப்பட்ட தியேட்டருக்கு, சத்திரசிகிச்சைக்கான உபகரணங்கள் உடனேயே வழங்கப்பட்டு சிகிச்சை வழங்க ஆரம்பித்தல் வேண்டும் எனவும் எம். பி. எடுத்துக் கூறினர். அத்தோடு ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்ரே' வசதியும், இரத்தம் ஏற்றுவதற்கான வசதியும் வழங்கப்படல்வேண்டும் எனவும் எம். பி. கேட்டுக் கொண்டார்.

பெரியமடுப் பகுதிக்கு என நிரந்தரமாக ஒரு அப்போதிக்கரியையும் மருத்துவ தாதியையும் நியமிக்க வேண்டும் எனவும் எம். பி. திரு. அழகக்கோன் சுகாதாரசேவை சுப்ரீண்டனுக்கு எடுத்துரைத்தார்.

## ஆசிரியர் (தடு) மாற்றங்கள்

முள்ளியவளை, ஞாயிறு

ஒலுமடு சைவ வித்தியாசாலை ஆசிரியர் திரு. ஆர். வேகாவனமும், புதுக்குடியிருப்புச் சைவ வித்தியாசாலை ஆசிரியர் திரு. கே. சங்கரப்பிள்ளையும், வவனியாக்கல்விக்கந்தோரினல் முறையே, ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாசாலைக்கும், முல்லைத்தீவுச் சைவ வித்தியாசாலைக்கும், மாதத்தொடக்கத்தில் மாற்றப்பட்டிருந்தனர்.

சில தினங்களின் பின், அம்மாற்றங்கள் வவனியா வித்தியாதிகாரியினலேயே தந்தி மூலம் ரத்துச்செய்யப்பட்டன.

மீண்டும் சில தினங்களின் பின், அவர்களைப் பழைய இடங்களுக்கே போகும்படி தலைமைக்காரியாலயம் தந்தி மூலம் அறிவித்துள்ளது.

## இடமாற்றம்

களுத்துறை, ஞாயிறு

கடந்த வருடம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலிருந்து களுத்துறைப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆஸ்பத்திரி சேவையாளன் திரு அ. ஞானப்பிரகாசம் திரும்பவும் வருகிற மாசி மாதம் முதலாந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டதையிட்டு அவருக்கோர் பிரிவுபசாரம் நடத்த ஆஸ்பத்திரிச் சேவையாளர்கள் ஏற்பாடுசெய்கிருர்கள்.


# மாணவர் அப்பியாச புத்தகங்கள்

## ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷனல் தயாரிக்கப்பட்ட

முதல் தர ரக கடுதாசியைக் கொண்டு செய்யப்பட்ட மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கோடுகள் இருப்பினும் இல்லாது விடினும் கீழ்க்கண்ட விலைக்கு இலங்கை முழுவதிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| சில்லறை விலை | | மொத்த விலை | |
|---|---|---|---|
| கடுதாசி தொகை | அ. புத்தகம் ஒன்று | டசின் | குரெஸ் |
| 40 பக்கம் | 11 சதம் | ரு. 1-20 | ரு. 14-40 |
| 80 ,, | 20 ,, | ,, 2-40 | ,, 28-80 |
| 100 ,, | 30 ,, | ,, 3-36 | ,, 40-32 |
| 200 ,, | 60 ,, | ,, 6-96 | ,, 83-52 |

மாணவர் அப்பியாசப் புத்தகங்கள் கீழ் வரும் பத்து ரகங்களிலும் கிடைக்கும் வேறுபட்ட ரகங்களெனினும் அப்பியாசப் புத்தகங்களின் விலை ஒன்றே.

அப்பியாச புத்தக ரகங்கள்:

ஒற்றைக் கோடிட்ட அப்பியாசப் புத்தகம், சதுரக் கோடு, இரட்டைக்கோடு (நீலம்), இரட்டைக்கோடு (நீலமும் சிவப்பும்) ஒருபக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் வரைக் கட்டமிடப்பட்டது, கோடு இடாது ஓரம் இடப்பட்டது, ஒரு பக்கம் ஒற்றைக் கோடிட்டு மறுபக்கம் கோடுகள் இல்லாதது, ஓரம் இடப்பட்ட அகலமான சதுரக்கோடுகள் இடப்பட்டது, ஓரம் இடப்படாத, அகலமான சதுரக் கோடிடப்பட்டது.

ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட குரெஸ் ஆடர் செய்பவர்களுக்கு:

1. 10 சத வீத கழிவு உண்டு.
2. கொழும்பு ஸ்டோருக்கு அண்மையிலிருக்கும் இடங்களுக்கு ரயில் செலவு ஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளும்.

விபரங்கள் அறிய:

**ஈஸ்டர்ன் பேப்பர் மில்ஸ் கார்ப்பரேஷன்**

போன்: 94040.

6, அல்பேர்ட்க்ரெசன்ட், கொழும்பு 7.


# தனிப்பட்டமுறையில் போதிக்கும் அரசாங்க ஆசிரியர்கள்

## கல்வி அதிபர் விடுத்துள்ள புதிய கட்டுப்பாடு

கொழும்பு, ஞாயிறு

தனிப்பட்ட முறையில் மாணவர்களுக்குப் பிரத்தியேகமாகப் பாடம் சொல்லிக்கொடுக்கும் அரசாங்க பள்ளிக்கூட ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பணத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும் என வித்தியாதிபதி சகல பள்ளிக்கூட அதிபர்களுக்கும் விடுத்த சுற்றறிக்கை ஒன்று கூறுகிறது.

தனிப்பட்டமுறையில் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்கள் தமது அனுமதி பெற்றுக்கொண்டபின்னரே பாடஞ் சொல்லிக்கொடுக்க வேண்டுமெனவும், மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு ஒரே நேரத்தில் எந்த ஆசிரியரும் பாடஞ் சொல்லிக்கொடுக்கக் கூடாது எனவும் வித்தியாதிபதி இச்சுற்றறிக்கையில் கேட்டுள்ளார். மாணவிகளுக்கு உபாத்தியாயர்களும், மாணவர்களுக்கு உபாத்தியாயினிகளும் பாடஞ்சொல்லிக் கொடுப்பதற்கும் வித்தியாதிபதியின் சுற்றறிக்கை கட்டுப்பாடு விதித்துள்ளது. மேற்பார்வையாளர் ஒருவரின் அனுசரணையின்றி பையன்களுக்கு ஆசிரியைகளும் மாணவிகளுக்கு ஆண்களும் பாடஞ் சொல்லிக் கொடுத்தல் கூடாது எனச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானிலிருந்து பிரயாணிகள்

கொழும்பு, ஞாயிறு

பாகிஸ்தானில் அம்மையும், காலராவும் பரவியிருப்பதை முன்னிட்டு அங்கிருந்து வரும்

## கர்ப்பிணியும் இரு புதல்விகளும் படுகொலை!

கொழும்பு, சனி

டங்சொலாவையிலுள்ள ஒரு வீட்டில் 28 வயதான கர்ப்பிணியினதும் அவரது இரு புதல்விகளினதும் பிரேதங்கள் கிடக்கக் காணப்பட்டன. சடலங்கள் கோடரியால் வெட்டப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கிடந்தன. சம்பவம் நடைபெற்ற சமயத்தில் அங்கிருந்ததாய்க் கூறப்படும் காலஞ்சென்ற பெண்ணின் 12 வயதான மகன் காணப்படவில்லை என்றும், பயத்தினல் அவன் அருகிலுள்ள காட்டுக்குள் ஓடித் தப்பியிருக்கலாமென்றும் நம்பப்படுகிறது. குற்றவாளிகளைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

## சைக்கிள் களவு

முள்ளியவளை, ஞாயிறு

கணுக்கேணியைச் சேர்ந்த திரு. சி. நாகரத்தினம், கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தனது சைக்கிளைத் தண்ணீரூற்றுச் சந்தைக்குமுன் நிறுத்திவிட்டுச் சந்தையினுள் சென்று மீண்டபோது, சைக்கிள் காணப்படவில்லை எனக் கூறப்படுகிறது. அதனைக்கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

காரிகளால் 14 நாள் வைத்திய சோதனைக்கு உள்ளாக்கப்படு

# "அம்மா என கத்திக்கொண்டு நிலத்தில் வீழ்ந்தார்"

## கொலைவழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

ஏழாலையைச் சேர்ந்த இராமலிங்கம் கனகரத்தினம், துரையப்பா ஞானசேகரம், செல்லையா ரத்தினம், இராமலிங்கம் சிவஞானம், செல்லையா இராசதுரை, சின்னப்பு துரையப்பா ஆகிய ஆறு நபர்களும் மல்லாகத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தையா என்பவரை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இச்சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் மல்லாகத்தைச் சேர்ந்த கணபதி கந்தசாமி என்பவர் சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியத்தில் கூறியதாவது:

இச்சம்பவம் நடைபெற்ற தினமாகிய ஆகஸ்ட் 12-ம் திகதி சுமார் 2 அல்லது 2-30 மணியளவில் மல்லாகச் சந்திக்கு ஓர் வாடகை சைக்கிள் எடுப்பதற்காகச் சென்றேன். மல்லாகம் கூப்பன் கடைக்கு முன்னால் சுமார் 25 அல்லது 30 ஆட்கள் கூட்டமாக நின்றார்கள். முதல் ஐந்து எதிரிகளும் இரும்புத் துண்டுகள் கோடரிகள் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் நிற்கக் கண்டேன். அப்பொழுது சட்டம்பியின் கார் (கொலை செய்யப்பட்டவரின் தமையன் கனகரத்தினம்) கோர்ட்டு வீதிவழியாக வந்து கராச்சினுள் நிறுத்தப்பட்டது. சட்டம்பி அக்காரிலிருந்து இறங்கும் பொழுது முதலாவது எதிரியான இராமலிங்கம் கனகரத்னம் ஓர் கதிரையால் சட்டம்பியை அடித்தார். சட்டம்பி காரில் இருந்து இறங்கியதும் கனகரத்தினம் சட்டம்பியை மீண்டும் இரும்புக் கம்பியால் அடித்தார். இதனைத் தொடர்ந்து முதல் ஐந்து எதிரிகளும் சட்டம்பியைத் தாக்கினர். இன்னுமோர் நபர் சட்டம்பியை தாக்க எத்தனித்தார். அப்பொழுது அவ்வினம் தெரியாநபரை கந்தையா (கால்ஞ் சென்றவர்) துப்பாக்கியால் சுட்டார். அப்பொழுது அந்நபர் 'அம்மா' எனக் கதறிக்கொண்டு நிலத்தில் விழுந்தார். இவ்வேளையில் கராச்சினுள் நின்ற ஐந்து எதிரிகளும் வெளியே வந்தனர். செல்லையா இராசதுரை கந்தையாவிடமிருந்து துப்பாக்கியைப் பறித்தார். ஞானமும் கனகரத்தினமும் கந்தையாவைக் கோடரியால் வெட்டினர். இராசதுரை கந்தையாவை துப்பாக்கியினால் தாக்கினார்.

இச்சம்பவம் நடந்து கொண்டிருக்கையில் கொலை செய்யப்பட்டவரின் தம்பியான தம்பிப்பிள்ளை நடராசா அங்கு நின்ற ஒரு காரை எடுத்துக்கொண்டு பின்பக்கமாய் செலுத்திக் கொண்டு காங்கேசன்துறை வீதிவழியாகக் கொண்டுசென்றார்."

இந்நிலையில் மேல் விசாரணையை நீதிபதி இம்மாதம் 26-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## நீண்டநாள் தேவை பூர்த்தி

முள்ளியவளை, ஞாயிறு

பெரும்பாலான சைவப்பிள்ளைகள் படிக்கும், முதலியார் குளம் அரசினர் பாடசாலையில் நீண்டகாலமாகச் சைவ ஆசிரியர் இல்லாதது ஒரு பெருங் குறையாக இருந்து வந்தது. இப்போது பண்டாரவளையிலிருந்து ஒரு ஆசிரியர் மேற்படி பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதால், பெற்றோர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## முல்லைத்தீவில் உப்புத் தட்டுப்பாடு!

முள்ளியவளை, ஞாயிறு

முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதிகளிலுள்ள கடைகளில் உப்புக் கிடைக்காமையால், பாவனையாளர்கள் பெரிதும் அவதியுற வேண்டியுள்ளது.

ஆனையிறவு உப்பளத்தில் போதிய உப்பு இருப்பினும், 'சிவப்பு நாடா' முறைகளினால் இப்பகுதிக்கடைகளுக்கு உப்பு விநியோகஞ்செய்வதில் அடிக்கடி தாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது.

இங்குள்ள வியாபாரிகள்' தமக்குப் போதிய அளவு உப்புக் கொள்வனவுக்குப் பர்மிட் கிடைக்காத காரணத்தால், யாழ்ப்பாணத்திலிருந்து, உப்பை வாங்கிவரவேண்டியுள்ளதெனக் குறைகூறுகின்றனர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

திங்கள் 22-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 டாக்டர் ஏ. சதாசிவம் - பேச்சு.

இரவு 7-00 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம், 9-30 தேர்ந்தஇசை. 9-45 வி. சுந்தரம் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு. 12-30 நடுத்தரப்பள்ளி

களுக்கு, 1-00 ஜானகி ஸ்ரீநிவாசன் - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 நல்உரை, 8-00 லச்சபுட வெண்பா, 9-15 இசைக்கோவை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 பாட்டு.

## தபால் அட்டை தட்டுப்பாடு!

முள்ளியவளை, ஞாயிறு

முள்ளியவளை, முல்லைத்தீவுத் தபாற்கந்தோர்களில், கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாகவே தபால் அட்டைகள் கிடையாமையால் பொதுமக்கள் அவதியுறுவதாகத் தெரிகிறது.

---

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கொழும்பு, ஞாயிறு

மாணவர்களை ஊக்குவிக்கவென இசை, நடனப் போட்டிகள் நடாத்திப் பரிசுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் செய்துவருகின்றது.

## கடல் தொழிலாளர் கூட்டம்

திருக்கோணமலை, ஞாயிறு

சமீபத்தில் கடல் தொழிலாளர் ஐக்கிய சங்கக் கூட்டம் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கடல் தொழிலாளர் எப்படி ஒற்றுமையாய் வாழ முடியும் என்பதையும் அப்படி ஒற்றுமையாய் வாழ்ந்தால் தான் தொழிலாளர் முன்னேற முடியும் என்பதையும் திரு. இன்னாச்சிமுத்து பேசும்போது குறிப்பிட்டார். சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்துத்தீர்மானங்களுக்கும் அமைந்து நடப்பதாய் அங்கத்தவர்கள் யாவரும் ஏகமனதாய் ஒப்புக்கொண்டு பின்வருவோரை உத்தியோகஸ்தராய் தெரிவு செய்தார்கள்.

தலைவர்: திரு. மி. ம. செல்வராசா, உபதலைவர் திரு. கு. யோசேப், காரியதரிசி: திரு. செ. சீவரத்தினம், உப காரியதரிசி: திரு. ப. செல்வராசா தனதிகாரி: திரு. வி. தம்பித்துரை.




கெட்டியான உணவு அருந்துவதற்கு

உங்கள் குழந்தையை சிறந்தமுறையில் பழக்கிவிட்டீர்களா?

அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவை சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

★ உணவை மாற்றும்பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்றாகச் செரிக்கக்கூடிய கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்கவேண்டும்.

மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ளவேண்டிய காலம். 50 வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் ரஸ்குகள்தான் பாலுடன் சேர்த்து ஊட்டக்கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.






பார்லீஸ் தானியப்பொருள்கள் கனிப்பொருள்கள் விட்டமின்சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்து விடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.

FARLEY'S

பார்லீஸ் ரஸ்க்ஸ்

குழந்தைகளின் முதல் கெட்டியான உணவு

# கள்ளக்குடியேற்றத்துக்கு உதவி செய்ததாக வழக்கு

## எதிரி விடுதலை

மாவிட்டபுரம், ஞாயிறு

சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 16-ந் திகதி சட்ட விரோதக் குடியேற்றக்காரர் எனக் கருதப்படும் 24 பேர் இலங்கையில் வந்திறங்குவதற்கு உதவி செய்ததாக மாதகலைச் சேர்ந்த கதிரவேலு கோவிந்தசாமி என்பவர்மீது குற்றம் சாட்டி காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். மரியநாயகம் மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்டிரேட் திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடர்ந்த வழக்கில் விசாரணை முடிவில் எதிரியை மாஜிஸ்டிரேட் விடுதலை செய்தார்.

நேற்று இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸடபிள் சுமனசேன சில்வா சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

நான் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 16-ந் திகதி மாதகல் பொலிஸ நிலையத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். அன்று அதிகாலை சுளிபுரம் உதவி கிராம அதிகாரி மாதகலில் சில கள்ளக் குடியேற்றக்காரர்கள் வந்து இறங்கியுள்ளதாக தகவல் கொடுத்தார். நான் அத்தகவலின்பேரில் நடவடிக்கைஎடுக்க காலை 5-45 மணியளவில் மாதகள் சந்திக்கு சமீபத்தில் சென்ற சமயம் சிலர் ஓர் வயலுக்குள் நடந்து சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னால் எதிரி கோவிந்தசாமி செல்வதைக் கண்டேன்.

சாட்சி எதிரி தரப்பு வழக்கறிஞரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கோவிந்தசாமி தான் அங்குள்ள குடியேற்றக்காரர்களை அழைத்துச் சென்றார் என்று தன்னால் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்று சுமனசேன கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் "நானும் பொலிஸ கான்ஸடபிள் குலரத்தினவும் எதிரியை நோக்கி ஓடினோம். எங்களைக் கண்டவுடன் கோவிந்தசாமியும் ஓடினார் கோவிந்தசாமி ஒரு திசையிலும், கள்ளக்குடியேற்றக்காரர் வேறு ஒரு திசையிலும் ஓடினர். கோவிந்தசாமியை கைது செய்ய எத்தனிக்கையில் கோவிந்தசாமி குலரத்தினவை தள்ளிக் கீழே விழுத்திவிட்டு ஓடிவிட்டார்" என்றார்.

அடுத்ததாக சுழிபுரம் உதவி கிராமஅதிகாரி திரு. நடேசுபரமேஸவரன் என்பவரின் சாட்சியத்தைப் பதிவு செய்தபின் வழக்கு சரியான முறையில் நிருபிக்கப்படவில்லையெனக் கூறி மாஜிஸடிரேட் எதிரியை விடுதலை செய்தார்.

### மற்றொரு வழக்கிலும் விடுதலை

சங்கானைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸடபிள் குலரத்தினவை அவரது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாக கதிரவேலு கோவிந்தசாமிமீது தொடரப்பட்ட வழக்கிலும் மாஜிஸடிரேட் அவரை விடுதலை செய்தார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் – மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

★ உண்மை இலட்சியம்!
★ அன்புத் தியாகம்!!
★ உணர்ச்சி ஏக்கம்!!!

மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!

இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப் பெற்றது.

# "கலையை வளர்த்துக் கொடுக்க வேண்டியது எமது கடமை"

## தமிழிசை விழாவில் உதவி வித்தியாதிபதி பேச்சு

### தமிழ் கீர்த்தனைகள் பாட வித்துவான் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அந்நிய ஆட்சியைத் தொடர்ந்து அக்காலத்துக்கு ஏற்ற முறையில் முன்னேறினோம். எம்மிலே நாம் தங்கியிருக்க வேண்டிய இக்காலத்தில், அக்காலத்து ஏட்டுக்கல்வி எதுவித பயனையும் தராது. அக்கல்விமுறையானது நமது இளைஞர்களை திக்கற்றவர்களாகவும் தன்னம்பிக்கை இல்லாதவர்களாகவும் மாற்றிவருகிறது. இந்நிலையை மாற்ற ஒரேஒரு வழிதான்உண்டு. பல்வேறு துறைகளிலும் எமது பிள்ளைகளுக்கு ஆர்வத்தை ஊட்ட வேண்டும். சில துறைகளில் முன்னேற பொருளாதாரம் முட்டுக்கட்டையாக இருந்தாலும் மற்றும் பல துறைகளில் சமூகம் முன்னேற பூரண சுதந்திரம் உண்டு. கலை, கலாசாரத் துறைகளில் இளைஞர்கள் பலர் ஈடுபட்டு கலையையும் வளர்த்து தங்கள் நிலையையும் உயர்த்தலாம். அவற்றிற்கு இப்படியான தமிழிசை விழா மேடைகள் உதவ இருப்பது வரவேற்கவேண்டியஒன்றாகும்."

இவ்வாறு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு எஸ். யூ. சோமசேகரம் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ்மன்றத்தின் 4-ஆண்டு நிறைவுத் தமிழிசை விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:—

ஒவ்வொரு சந்ததியாரும் தங்கள் நாட்டை—தாம் தமது முந்திய சந்ததியாரிடமிருந்து பெற்றதைவிடச் சிறந்ததாக தமக்குப் பின்வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்வது அவர்களது முக்கிய கடமையாகும். கலை, கலாச்சாரத் துறைகளை நாம் வளரவளர விருத்தியாக்கிவருவது அவசியம்.

ஒவ்வொரு நாடும் கலைவளர்ச்சிக்காக அதிக பணம் செலவிடுகின்றது. மக்கள் தம் ஓய்வு நேரத்தை இன்பமாகக் கழிக்க விரும்புவது இயற்கை. இதற்காக நூற்றுக்கணக்கானோர் மாலை வேளைகளில் படம்பார்க்கவும் சங்கீதம் கேட்கவும் தங்கள் வருவாயில் பெரும் பகுதியை செலவிடுகின்றனர். எங்கள் கலையை நன்கு வளர்த்தோமாகில், இப்பணத்தை வெளிநாடுகளுக்குச் செல்லவிடாமல் இங்கேயே வைத்திருந்து நாட்டின் பொருளாதாரத்தை சீர்திருத்த உபயோகிக்கலாம். இத்துறையில் அண்ணாமலை மன்றம் செய்யும் சேவையைப் பாராட்டுகிறேன். சங்கீதத்தை வளர்க்கின்றார்கள். இளம் வித்துவான்கள் தங்கள் கலையை மேன்நிலைக்குக்கொண்டுவர இம்மேடைகள் உதவுகின்றன. விழாவை தரிசிக்க வரும் இளைஞர்கள் பலர் சங்கீதத்தில் ஆர்வமுள்ளவர்களாக மாறுகின்றனர். இதனால் சங்கீதத்தின் தரமும் மேலோங்குகிறது. இக்கலைத் துறையிலாவது வருங்காலச் சந்ததியினருக்கு நாட்டை அதிக சிறப்புள்ளதாகக் கொடுப்போம்.

இம்மன்றத்தின் 4வது ஆண்டு நிறைவுத் தமிழிசை விழா கடந்த வெள்ளிக்கிழமைமாலை நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் ஆரம்பமானது. டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியம் விழாவை தொடக்கிவைத்தார். அவர் தமது தொடக்க உரையில் கூறியதாவது:-

### வளர்க்கவேண்டியது இன்று அவசியம்

இன்றைய நிலையில் தமிழர்கள் தங்கள் பாரம்பரியமான கலை கலாச்சாரங்களை வளர்க்க வேண்டும். அதற்கான தேவை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. மக்களிடையே கலையார்வத்தை ஏற்படுத்த இப்படியான விழாக்கள் அவசியம். இப்படியான முயற்சிகளுக்கு அரசாங்கமும் பக்கபலமாக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கும் உதவ வேண்டும்.

காரியதரிசி திரு. ஏ. ஆர். நமசிவாயம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

### தமிழில் கீர்த்தனைகள் பாடவேண்டும்

வித்துவான் க. ந. வேலன் பேசுகையில் கூறியதாவது:—

இசையைப்பற்றிய கருத்தைத் தெரிவிக்க இசைக் கலைஞனுக்கு மாத்திரம்தாம் உரிமையல்ல; இரசிகனுக்கும் உரிமையுண்டு. இசைத்துறையில் வேற்றுமொழிகள் கீர்த்தனங்கள் இடம்பெறுவது கூடாது. தமிழ்க் கீர்த்தனைகளில் முத்துத்தாண்டவருடைய கீர்த்தனங்கள் போற்றத்தக்கவை. இரசிகனதும் கலைஞனதும் மனதைத் தொடக்கூடிய தமிழ்க்கீர்த்தனங்கள் இருக்கும்போது தெலுங்கு கீர்த்தனங்கள் பாடுவது மதிப்பு என்றும் கெட்டித்தனமென்றும் பலர் கருதுகிறார்கள். அது தவறாகும். இருபகுதியாரும் புரியும் தமிழில் தமிழ்க்கலைஞர்கள் கீர்த்தனங்களைப் பாடுவது அவசியம்.

நேற்றுடன் மூன்று நாள் நிகழ்ச்சிகளும் முடிவடைந்தன. நேற்றை நிகழ்ச்சிகளுக்கு காரியாதிகாரி திரு. டி. பாலச்சந்திரன் தலைமை வகித்தார். இன்னும் பலரும் பேசினர்

மூன்று நாட்களும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல கலைஞர்கள் கச்சேரிகள் நடாத்தினார்கள்.

## தேவை

தென் யாழ்ப்பாணம் இராமநாதபுரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்துள்ளமைந்த A பண்டகசாலையின் ஸ்ரோர்க் கீப்பர் M. M. சிறில் தம் குறைகளை 1-2-62க்குள் பூர்த்தி செய்யாதிருப்பின் அவரிடத்துக்கும் B பண்டகசாலைக்கும் ஸ்ரோர்க் கீப்பர்கள் தேவை. விரும்பினோர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய விண்ணப்பிக்கலாம். நியமனம் நிர்வாகசபைக்கே உரியது.

நிபந்தனைகள்

1. தராதரம் J. S. C. அல்லது S. S. C.
2. வியாபார அனுபவமும் நற்பண்பும் நிர்வாகிகட்கமைவும் பொது அங்கத்தவரிடம் இன்மொழி கூறி அவராதரவைப் பெறுமாற்றலும் ஊக்கமும்.
3. வயது 25க்கும் 35க்கு மிடைப்பட்டும் பதிவு சான்றுடன் அமைந்துமிருத்தல்.
4. பிணை ரொக்கம் ஆயிரம் ரூபாவும் ஆதனப் பிணையாக ரூபா இரண்டாயிரமும், பிணைப் பத்திரங்கள் தம் செலவில் முடித்தல்.
5. சோர்வுக் கணக்கு எக்காரணங்கொண்டும் நிகழாதிருத்தல்.
6. நியமனம் (1-2-62) தற்காலிகம். சேவைத் திறம் நோக்கி உறுதியாக்கப் படும்.
7. மாத வேதனம் ரூபா 120.
8. விண்ணப்பத் தேதி 26-1-62க்குள் கௌரவகாரியதரிசிக்கு அனுப்புதல் வேண்டும்.
9. தேர்தற்தேதி 31-1-62 அன்று உண்மைச் சான்றுகளுடன் சமுகமளித்தல்.

நிறுவையாளர்

முன்னை நாள் நிறுவையாளர் ரூபாய் 250 ரொக்கப் பிணை கட்டுவராயின் அவரை ஏற்றலும் தவறுவராயின் அவரிடமாக வேறு பேர் விண்ணப்பிக்கலாம். ரொக்கப்பிணை ரூபா 250. மாத வேதனம் ரூபா 45. நிபந்தனை மேற்காட்டிய 2வது. வயது 21க்கு மேல் 25க்கு இடையில். நியமனம் 1-2-62. தற்காலிகம்.

ஆ. கந்தையா
சங்கத் தலைவர்.

21-1-62

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா சிவாஜி கணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாசமலர்.

●

சாவகச்சேரி தேவேந்திரா: சிவாஜி கணேசன், பி. சரோஜா தேவி நடித்த விடிவெள்ளி

## கியூபா பற்றி விவாதம்

### அமெரிக்க ராஜ்யங்கள் மகாநாடு

வாஷிங்டன், ஜன. 21

கியூபா பற்றி விவாதிப்பதற்காக அமெரிக்காவின் 21 ராஜ்யங்களின் வெளிவிவகார மந்திரிகள் நாளை உறுகுவேயில் கூடுகின்றனர். இந்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன் றஸ்க் இன்று வாஷிங்டனிலிருந்து உறுகுவேக்குப் பிரயாணமானார்.

கியூபா கம்யூனிஸ்ட் நாடுகளுடனுள்ள தொடர்புகளை 60 நாட்களுக்குள் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்றும் இல்லையேல் அமெரிக்க ராஜ்யங்கள் கியூபாமீது சமூக, அரசியல் பொருளாதார தடை நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற யோசனைக்கு இந்த மகாநாட்டில் ஆதரவு கிடைக்க மாட்டாதென்றும் ரஷ்யா, பீக்கிங் ஆகிய கம்யூனிஸ்ட் நாடுகளுடனுள்ள உறவுகளை கியூபா துண்டித்துக் கொள்ளவேண்டுமென்று பிரதமர் பிடல் காஸ்ட்ரோவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் மட்டும் நிறைவேற்றப்படக் கூடுமென்றும் மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## துருப்பினரை காணவில்லை

வியன்டைன், ஜன. 21

லாவோசில் கம்யூனிஸட் படையினர் மறைந்திருந்து நடத்திய ஒரு தாக்குதலின் பின் லாவோஸ அரசாங்கத் துருப்பினரையும் நான்கு அமெரிக்க ராணுவ ஆலோசகர்களையும் காணவில்லையென்று அறுவிக்கப்படுகிறது.

## டென்மார்க் பிரதமர்

புதுடில்லி, ஜன. 21

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள டென்மார்க் பிரதம மந்திரியும் அவரது பாரியாரும் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக இன்று புதுடில்லியிலிருந்து புறப்பட்டு ஆக்ரா போய்ச் சேர்ந்தனர். இம்மாதம் 26-ந் திகதி சென்னையில் நடைபெறவிருக்கும் குடியரசுதினவிழாவில் இவர்கள் கலந்துகொள்வார்கள்.